உ

சிவமயம்.

ஸ்ரீகோவிலூர்

ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர்

என்னும்

# ஸ்ரீ ஆண்டவர் சரித்திரச் சுருக்கம்.

இது

காரைக்குடி

மேலமடம்

சேவு. பழ. பழநியப்ப அய்யா அவர்களால்

இயற்றப்பட்டு,

ஷ யார் குடும்பத்தாரால்

சென்னை சூளை

ஸ்ரீ பாரதி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1928

இதன் விலை அணா ௪.

ஸ்ரீ சௌந்தரிய நாயகி பிள்ளைத்தமிழ் ஆசிரியர், 65-வது திருவிளையாடலாகிய ஸ்ரீ அசுவத்தேசப் படலத்துள் நுதலி யருளியுள்ளதைக் காட்டுதுங் காண்மினோ காண்மின்:—

பிரமவா நந்தப் பெருங்கடன் முழுகியே பிறிவறச் சுகித்தாடி, யொருமை மேயநன் மகத்துவன் விகற்பமி லொள்ளிய நிலைநிற்போன், கரும மேகிடக் கண்டவர் பிணியறக் கதிர்விடு கவின்வாய்ந்தோன், பெருமை பேசிடச் சேடனும் பின்னுறிற் பேசுறுந் தகைத்தாமோ.

சிக்கிற் றேசிகன் சேவடி சேவைசெய் திருநாண்
மக்கினச் சுரம் வந்துற மாலயன் றேடுந்
தக்க வன்னையே கன்னியாய் முத்தினந் தணிப்பான்
புக்கிருந் தனனெனி னவன் பெருமையார் புகல்வார்.

காரைமாநகர்க் கேகியே கால்கள் நொந்திடவே
வீரமாதவன் வெண்டுக ளெனக்கருள் விமலை
சேரையா வினிக் கோவிலூரெனச் செப்பிற்றேவன்
பேரையே தினம் வழுத்தலல்லாற் பிறிதுளதோ.

அன்னை நெல்லையா ளநுதினமகர்நிச மருகில்
முன்னவ னுடனிருந்தருண் மொழிமொழிந் தனளேல்
பின்னவன் பெரும்பெருமையைப் பேசநாவொன்றோ
சொன்ன வின்றிடுந் தகையது தொண்டரேசொன்மின்.

பிரம வித்தையின் பரம்பரை பெரிதினினிலவ
அருமை வைத்தநன் மடமொன்றை யாற்றெனவனையே
கரும முற்றுறக் கதலிமுற் பொருள்களை யருளின்
திரம தெத்துணையாஞ்சொலத் தேசிகன் புகழே.

அன்பி னித்தியமங்கலை யையன் முன்றோன்றி
யன்பவோ!ருண்டைக் கிருவரு மண்மினமெனவே
என்புருகிய வன்பொடு மெழுந்தருள் புரிந்தால்
முன்பன் சீர்த்தியைச் சேடனு மொழியவோமொழியீர்.

ஐயனுர்முதற் றேவருந் தங்குறை யகற்ற
மெய்யனு ரிடம்விண்ணப்ப மிழற்றுவ ரெனின்யாம்
துய்யனுர்பதம் தொழுவதை விடுத்தொரு கணமும்
பொய்யனுருடன் வாழ்வதும் புகழ்கொலோ புகலீர்.

எவனுலகினி லெழுதலா லெங்கணு மறையின்
உவமனின்றிய முடிபொரு ளோசையே மிகுத்த
பவமகற்றிடுஞ் சீடர்தம் பரம்பரை பரந்த
தவன்பெருமையைpயறையுமா றெங்ஙனே யறையீர்.

சகருரவன் முன்வந்தருண் முறையெலாஞ் சகத்தின்
மிகக்குயிற்றின மேலவ னுதித்தில னயின்
புகல்வதெங்ஙன் யாம்மறைமுடிப்பொருளினை யிருணின்
றகல்வதெங்ஙன மன்பரே யறைமினே வறைமின்.

சாத்திரக் கடல்விரிந்ததுங் சதுர்மறை விரிவுங்
கோத்திரத் திரள்விரிந்ததுங் கோவில்கள் விரிவும்
நேத்திரத்திரு நாதனே நேரின் முத்தீசக்
காத்திரந் தரியானெனிற் காண்பவரெவரே.

தென்முகமாகி வைகுந்த தேவனே தென்னு டுற்ற
நன்மைசெய் யறத்தினனே ஞானதே சிகனுய்வந்தே
புன்மைமிக் கிருந்தவெம்மைப் புகழ்பெறப் புரிந்திட்டானு
தன்மையை யறிந்திலாருந் தரணியின் மநுடர்தாமோ. [ல்

# முகவுரை.

உலகத்தில் புருடர்கள் சுருதிஸ்மிருதிகளை ஓதியுணர்ந்து அவற்றிற் சொல்லிய விதிப்படி நடத்தலோடு அப்பெரியோர் ஒழுக்கங்களைக்கண்டும் கேட்டும் ஒழுகுவது சகஜமாம். அப்பெரியோர் யாவரெனின் பிரஹ்மஞான நிஷ்டர்களாய் உலகத்திற்கு உபகாரமே செய்துகொண்டிருப்பவர். அத்தகைய பெரியோர் மகிமையைச் *சாஸ்திரங்கள் அளவின்றிக் கோஷிக்கின்றன. ஆதலால் அவர்கள் சரித்திரத்தைப் பிரசித்தப் படுத்தினால் சிரேயசுண்டாதலன்றி அதனைப் படிப்பவர் கேட்பவர் யாவருக்கும் புண்ணியமாகிய

---

சமாசுநிலயம்.

* ஒழுக்கமேபுரிந்தோனாதலதனைவிட்டொழிந்தோனாத
விழுக்கஞ்செய்மூர்க்கனாதல்பண்டிதனாதலெண்ணில்
பழிப்பருஞானந்தன்னின்முயல்பவன்பணியத்தக்கோன்
றொழத்தகுஞானியென்று சொல்லவேண்டுவதுமுண்டோ.

பலன்கள்வேண்டியபரிசெலாம்பலித்திடும்பரமதத்துவஞானி
நலங்கொளுமமாமந்திரஞ்செபித்திடநயந்தவனீராடுஞ்
சலங்கொடீர்த்தமாமவன் றிருமேனியேசகலதெய்வமுஞ்செவ்வாய்
மலர்ந்தவாசகமறுபிறப்பெனவருமயற்பிணிமருந்தாகும்.

பிரமகீதை.

தேசிகன்றன்றிருமேனிசிந்தைசெய்யச்சிவனைச்சிந்தித்தா
னாஞ்செம்பொற்றாளிற்,பூசனைசெய்திடவெங்குமாகிநின்றபூரணனை
யினிதாகப்பூசித்தானா, நாசமிலாச்சிவனாமநவின்றானாண்டநாயகன்
றன்றிருநாமநவின்றானாகி, லீசனையேயிகழ்ந்தானாங்கண்ணிற்காண
வெழுந்தருளுந்திருக்கோலமிகழ்ந்தானாகில்.

ஈசனாஞானியிருந்துளவிடத்தேயிருப்பதுமுத்திதானந்தத்
தேசிகனேவல்செய்பவன்காலென்சென்னியிலிருப்பதுமன்னி
மாசிலாப்பரமஞானியாமுனிக்குமகேசனுமொப்பலன்மதிக்கி
லாசிலாவரியுமொப்பலனானுமொப்பலனேவரொப்பாரே.

அதிருஷ்ட பலமும், அவர் சரிதங்களைக் கேட்குங்காலத்து அவர் ஒழுகியவாறே யாமும் ஒழுகவேண்டுமென் றுண் டாகும் எண்ணமாகிய திருஷ்டபலமு முண்டாமெனக் கருதி, முற்கூறிய விலக்கண மமைந்தவர்களும் கோவிலூர்ப் பரம்பரையில் முதன் மூன்று பட்டத் திருந்தவர்களுமாகிய ஆண்டவர், துறவுசுவாமிகள் கருணாநிதிசுவாமிகள் என்னும் மூவர் சரித்திரத்தையும் அவர்கள் மாணாக்கர்களால் கேட்ட வண்ணம் சுருக்கிச் சிறு புத்தகரூபமாக்கி, அதற்கு ஆண்டவர் சரித்திரச்சுருக்கமெனப் பெயரிட்டு, ஸ்ரீ பொன்னம் பலஞானதேசிகர் அநுமதியின்பேரில் பதிப்பிக்கலானேன்.

காரைக்குடி - சேவு - பழ

---

சூதசங்கீதை.

ஞாலமுண்டவன் றலைமிசைசுமப்பன்மெய்ஞ்ஞானிவேண்டுவதெல்
மாலமுண்டவனவன்பின்னே திரிகுவனவனடித்துகட்கன்றே [லா
சீலமன்னருமற்றுளதேவருந்திசைதிசைபணிந்தேத்தக்
காலிரண்டையுஞ்சிரமிசைவையெனக்கழறுவன்கமலத்தோன்.

கனவினிற்காணுங்காட்சி போற்சகத்தைக்காணுமெய்ஞ்ஞானிகடம்மை, மனுடனேவன்றித்தேவனென்றெண்ணு மனநினைவிருத்தியைமாற்றி, யினையனபரமசிவனுருக்கொண்டிவ்வுலகுய்யவெழுந்தருளினனென், றனையவைநினைப்போருத்தமரல்லோராடியை நோக்குமந்தகரே.

சசிவர்ணபோதம்.

ஞானியைநரன்சுரனெனுதொழிக
ஞாலமுயநாதனருளால்
மேனியதுகொண்டுதனைநல்கவரு
மென்றறையும்வேதமுடிவே.

என்பன பெரியோர் மகிமையைக்கூறும் சாஸ்திரங்களாம்.

சிவமயம்.

# ஆண்டவர்ஸ்துதி.

## கருணாநிதி அருளிச்செய்தது.

வானவரசமாந்தொடர்பினாலுலகோர்வழுத்துறும் வன்னியைங்கரனை
வானவரதனமணியறுமுகனைமாசறுகொற்றவாளிறையை
வானவர்முதுவன்பாலனவலவன்வணங்குநற்றிருநெலைமாதை
வானவரதனுமுத்துராமேச வள்ளலைவணங்கிவாழ்த்திடுவோம்.

சித்தரும்பரவாநின்றசீர்மிகுங்கழனிதன்னிற்
பித்தனுமெனையுமாளப்பேரருளுருவாயுற்ற
முத்தனுமுத்துராம முதல்வனற்கமலபாத
நித்தமுந்தொழுதுவாழ்த்திநெஞ்சினிலிருத்தல்செய்வாம்.

## பொன்னம்பல ஞானதேசிக ரவர்கள் அருளிச்செய்தது.

பத்துநான்கும்பதைப்பொழிந்தேகிடச்
சுத்தஞானசுகோததிமூழ்கிட
முத்துராமமுனைவன்றிருப்பத
நித்தநாண்மலர்நெஞ்சத்திருத்துவாம்.

## சொர்னநாதபுரம் - பழநியப்பய்யா அவர்கள் இயற்றியது.

வெண்பா.

வெய்யவினைதீர்க்குமடிமேலோர்வணங்குமடி
யையந்திரிபையகற்றுமடி—மெய்யன்ப
ருய்யுநெறிகாட்டுமடியொப்பில்கழனியில்வாழ்
அய்யன்முத்துராமனடி.

கண்ணுதலுஞ்செஞ்சடையுங்கறைமிடருந்தான்கரந்துகயிலைநீங்கி
எண்ணரியமுத்துராமேந்திரய்யனெனுநாமமெங்குமோங்க
மண்ணுலகிலடியார்க்குமுத்திநிலைபிரமமெனவகுக்கவந்த
வண்ணமளிக்குங்கழனிநகரினில்வாழ்குருபரனைவணங்கிவாழ்வாம்

திருவாடுதுறை யாதீனத்து மஹாவித்துவான்

திரிசிரபுரம்

## மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்களால்

இடற்றப்பட்டது.

மேயபெருங்கழனிநகர்கோவிலூரெனும்பேர்
மேவவிறையாலயத்தைவிரித்தவருட்பெரியோன்
பாயபுனறிரண்டாலியாயதெனச்சுத்தப்
பரப்பிரமமிவ்வுருக்கொண்டுற்றதெனும்புரண
ஞயபுகழ்வேதாந்தசிரவணஞ்செய்துலகி
லளவிலர்சைதன்னியமாகப்புரிந்தவறவோன்
தூயமுத்துராமலிங்கதேசிகனென்றுரைக்குஞ்
சோதிலிங்கசொரூபனெனுஞ்சோதியையேத்தெடுப்பாம்.

---

## ஸ்ரீ துறவுசுவாமிகள் ஸ்துதி.

திருவாடுதுறை யாதீனம் மஹாவித்துவான்

திரிசிரபுரம்

## மீனுட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள்

இயற்றியது.

துறவொழுக்கமனைத்துமொருவடிவுகொண்டாலன்ன
தூயவன்றன்மயமாகயாவையுங்கண்டிருப்போன்
மறவொழுக்கக்கடிந்துயிர்கள்சுவாநுபவமருவ
வயங்கியவேதாந்தசிரவணமேற்றும்வலியோ
னறவொழுக்கந்தலையெடுப்பக்காரணங்கண்டுவெப்போ
னடங்குமிடமாகியசிதாகாசப்பிரிய
னுறவொழுக்கம்வளர்த்தவருணசலதேசிகனென்
றுறைத்திடுநந்தீசனெனுமொருவனைவாழ்த்திடுவோம்.

---

## சொர்னநாதபுரம் - பழநியப்பய்யா அவர்கள் இயற்றியது.

### வெண்பா.

இன்பமளிக்குமடியென்வினையைநீக்குமடி
துன்பங்களெல்லாந்தொலைக்குமடி—யன்பார்
கருணாகரனுங்கழனிநகர்வாழு
மருணாசலன்சேவடி.

### விருத்தம்.

செங்கமலமலர்போன்றமுகந்தானெங்கேசிறியனீவா வென்றழைத்ததிருவாயெங்கே, யங்கமெலாநீறணியுமழக தெங்கே யரியவெண்கோவணங்கட்டுமரைதானெங்கே, சங் கையறப்பொருளோதுஞ்சமர்த்துமெங்கேதாயினிலு மிகச் சிறந்ததயைதானெங்கே,மங்கையரைமிகப்பழிக்குங் கவிதா னெங்கே வளலருணாசலமுன்போல் வந்தாள்வாயே.

---

சிதம்பர அய்யாவென்னும்

## கருணாநிதிஸ்துதி.

## சொர்னநாதபுரம் - பழநியப்பய்யா இயற்றியது,

### விருத்தம்.

மதம்படுகடைமினுர்தம்மையனுட்படாமலீசன்
பதம்பெறவெனக்குமேன்மைபாலிக்குமருணைக்குன்றின்
இதம்பெறுதுணைவனுகியென்னுயிர்த்துணையுமான [ம்.
சிதம்பரப்பெரியோன்செம்பொற்சேவடிசென்னிசேர்ப்பா

---

திருவாடுதுறை யாதீனம் மகாவித்துவான்

திரிசிரபுரம்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள்

இயற்றியது.

மேலாயதுறவினுக்கோர் துணையாகியுள்ளான்
விரிந்தபலபுவனமுங்கான் றிடுசோற்றிற்கண்டோ
னலாயமறைமுடிபின்பொருள்விளங்கவெடுத்து
நலமாணவர்க்கருளித்தன்மயமாக்கிடுவோன்
பாலாயசிவதருமம்பற்றறப்பாலிப்போன்
பரப்பிரமசுவாநுபூதியிற்சிறந்தமேலோ
னாலாயயாவுமுணர்ந்தவர்யனுவினெடுத்து
நுவலுமொருசிதம்பரதேசிகனெனுமாபெரியோன்.

சிவமயம்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை.

# ஆண்டவர் சரித்திரச் சுருக்கம்.

பரதகண்டத்திலே பாண்டியநாட்டிலே கீழ்த்திசையிற் றிருப்பெருந்துறையும், தென்றிசையிற் கண்டதேவியும், மேற்றிசையிற்றிருப்புத்தூரும், வடதிசையிற் றிருமெய்யமுமாகிய இந்நான்குக்ஷேத்திரங்களையும் எல்லையாக வுடையதாய், மகாதவத்தினராகிய மதுப்பிரிய இருஷியின் வேண்டுகோளின்படி ஸ்ரீராஜகட்க பரமேசுவரர் ஸ்ரீ சாலிவாடீசுவரியென்னும் அம்மையாரோடு எழுந்தருளப்பெற்று இனிது விளங்கும் ஸ்ரீ சமிவனக்ஷேத்திர மென்னும் கோவிலுருக்குக் கீழ்பால் வணிகர் குழாங்களாற் சிறப்புற்றோங்கும் காரைக்குடி என்றோர் நகருண்டு. அந்நகரில் வணிகர் குலத்திலே மெய்யப்பசெட்டியா ரென்பவர் ஒருவரிருந்தார். அவர் மனைவியார் பெயர் வள்ளி யம்மையார். அவர் வயிற்றில் அந்நாட்டாரும், பிறரும் முற்பிறப்புகளிற் செய்த பெருந் தவப்பயனாலும், ஸ்ரீ அகண்ட சச்சிதானந்த பரிபூரண சொரூப பரமேசுவரனது பூர்ணகிருபையினாலும் ஓர் செல்வத் திருக்குமாரர் அவதரித்தனர்.

அங்ஙனம் அவதரித்த குமாரர் முத்துராமலிங்கரெனப் பெயர் தரிக்கப்பெற்று, இளமைப் பருவத்திற்றானே சகல கலைகளையும் ஓதி யுணர்ந்து, விவேக வைராக்கியாதி சாதனங்களாற் சிறந்து விளங்கி, சிலகாலம் ஊருக்கு ஆக்கினேய திசையிலுள்ள திருவாசல் மடத்திற் றமது நண்பராகிய நல்லான்செட்டியாருடன் ஞானநூற் பயிற்சிசெய்து, பிர

பஞ்சம் உண்மையென்னும் மயக்க மின்மையின் அதிற் சிறிதும் இலக்ஷியமின்றி, கேட்பவ ரதிசயிக்க மிகக் கெம்பீரமாய் வைராக்கியபரமான வார்த்தைகளை வசனித்துக் கொண்டு, தாம் குருவை யடைந்து குரு சம்பிரதாயத்தை விளக்கவேண்டுமென்னுங் கருத்தை யுட்கொண்டு, அது வாய்க்கும் தருவாயை எதிர்பார்த்தவராய், விபூதியை உத்தூளனஞ் செய்துகொண்டு அகநோக்குற்றுத் தமது உண்மைநிலையி லிருப்பார்.

அவர் ஒருநாள் தமது பிதா வடதிசையிலுள்ள திருநாகைக்காரோணத்திற் கடுத்த சிக்கலென்னும் தலத்திற்கு வியாபார நிமித்தம் பிரயாணப்பட, தாமும் அவருடன் சென்று அங்கு வசித்துக்கொண்டிருந்தனர். இஃது இங்ஙனமிருக்க, அச்சிக்கலுக்கடுத்த பொருள்வைத்த சேரியில் பிரமநிஷ்டராகிய உகந்தகுருசுவாமிகள் என்னுந் திருநாமமுடைய ஓர் மகான் இல்லறத்திருந்தனர். அவர் * ஸ்ரீசச்சிதாநந்தசொரூப விஷ்ணு, பிரமா, வசிஷ்டர்முதற் கிரமமாக வரும் குருபரம்பரையைச் சேர்ந்தவராய்த், திருவள்ளுவநாயனர் போலவும், கபீர்தாசர்போலவும் நெய்தற்றொழிலால்வரும் ஆதாயத்தை மறுநாட் டொழிற்கு நூல்வாங்கவோர் பாகமும், குடும்பச் செலவிற் கோர் பாகமும், அடி

---

விருத்தம்.

* பரமாகவொளிர்சச்சிதானந்தமாம்விண்டுபெங்கயன்வசிட்டர்சத்தி
பராசமாமுனிமகாவியாசர்சீர்சுகர்கௌடபாதர்கோவிந்தயோகி
யருளுருவமாஞ்சங்கராசாரியாமிறைகளமர்பத்மபாதருயரத்
தாமலகர்தோடகாசிரியர்வார்த்திகர்வித்தியாரண்யராகுமுரவோ
ரிருளுருவமற்றவவர்மரபதனில்வந்தசுப்பிரமணியதேவனயின
வீசனழகப்பவாரியன்வீரபத்திரகுருவின்பழுத்தையவடிக [ட
டெருளுருவமாமுகந்தையனன்மைகளிலாத்தீய்னேன்றனையுமாண்
சீர்முத்துராமலிங்கேசதேசிகனிவர்கடிகழ்பதமிறைஞ்சுவோமே.

யார்களுக் கமுதளித்தற் பொருட்டோர் பாகமுமாக விநி யோகித்து வருவதோடு முமுக்ஷுக்களாய்த் தம்மைச் சரணடைந்தோரைச் சோதித்து ஞானோபதேசமுஞ் செய்துவருவர்.

இவரது பிரபாவங்களைக் கேள்வியுற்று இராயவேலூரிலிருந்த கந்தப்பசுவாமிக ளென்னும் ஜிஞ்ஞாசு சில சாதுக்களோடும்பொருள்வைத்த சேரிக்கு வந்து, அவ்வுகந்த குருசுவாமிகளை விதிப்படி சரணடைந்து, இப் பவசாகரத்தினின்றும் எம்மை யீடேற்றல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, சுவாமிகள் அவர்களைப் பரீக்ஷித்து, அவர்களுக்குள் கந்தப்பசுவாமிகளையே பக்குவியெனத் தெரிந்து அவருக்குப் பரமாத்வைத ஞானத்தை யநுக்கிரகித்தனர்.

அக்கந்தப்ப சுவாமிகள் அவர தநுக்கிரகத்தால் பிரமாநுபூதியை யடைந்து ஆசிரியரிடத் தநுமதிபெற்றுத்திருவண்ணமலை யென்னும் தலத்தினை யெய்தி, ஈசானியத்தில் நிர்ஜனப் பிரதேசத்தோர் மரத்தடியில் †நிருவிகற்ப சமாதியுற்றிருந்தனர். இவ்வாறிருக்க, உண்ணுமுலையை யொருபாலுடைய அண்ணமலையார் அவ்வூரடியார் களுக்குச் சொப்பனத்திற் றோன்றி, கந்தப்ப சுவாமிகளுக்கு மடமொன் றியற்றுவிக்கும்படி ஆஞ்ஞாபிக்க, அங்ஙனமே அவ்வடியார்கள் அவருக்கு ஈசானியத்தில் மடமொன் றியற்றுவித்தனர்கள். அதிலெழுந்தருளி யிருந்தமைபற்றி அவருக்கு ஈசானிய தேசிகரென்னும் திருநாமம் வழங்கி வந்

† இவர் சமாதியினின்று விழிக்கும்போது ஒருநாள் ஓர் பெரும் புலிமலையினின்றும் இறங்கித் தன்னருகில் வர, அதனை அண்ணமலையப்பா வந்தனையா வென்று தடவிக்கொடுத்தார். அது சற்றுநேரம் அங்குப் படுத்திருந்து மீண்டும் மலைக்குப்போய் விட்டது.

௩௩. நிற்க: முற்கூறிய உகந்தகுரு சுவாமிகள் அநேக முமுக்ஷுக்களுக்கு அநுக்கிரகஞ் செய்துவருவதை முத்து ராமலிங்கரென்னும் அக்குமாரர் கேள்வியுற்று, அச் சுவாமிகளிடம் சென்று அவரை விதிவத்தாகச் சரணடைந்து சிரவணாதிகளைச் செய்து வந்தனர். அப்போது அவருக்குப் பதின்மூன்றாண்டுகள் நிறைந்தன.

பின்னர் ஆசிரியரிடத்து விடைபெற்றுச் சென்று தமது நகரமாகிய காரைக்குடியில் வசித்து வரும் நாளில் ஒருநாள் வடதேசத்தினின்றும் இராமேசுவர யாத்திரையாக வந்து அவ்வூர் அன்பர்கள் பிரார்த்தனையின்பேரில் அங்கு வசித்து வந்த ஓர் பிராமணயோகீச்சுரர் தம்மை யுபசரித்துவரும் வணிகர்களைப் பார்த்து, இவ்வூரில் விவேகிகள் எவரேனும் உளரோவென்று வினவ, அவ்வணிகர்கள் எங்கள் வருணத்திலுதித்த ஓர் பிள்ளை கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்துளதென்றனர். அங்ஙனமாயின் அப்பிள்ளையை எனது சல்லாபத்தின்பொருட்டுஅழைத்து வாருங்களென, அவ்வைசியர்கள் அப்பிள்ளையிடத்துச் சென்று அவ்யோகீசுவரர் கருத்தை அறிவித்தனர். அதனைக்கேட்ட அப்பிள்ளை நல்லது வருவே னென்று பழ முதலியவற்றைக் கையிற் கொண்டு சென்று அவர் முன்வைத்து வணங்கிநின்றனர். நிற்கவே, அக்குழந்தையின் திருவுருவின்கண்ணுள்ள குறிகளைக்கண்டு யோகீசுவரர் பொருக்கெனவெழுந்து அவரை யாலிங்கனஞ்செய்து பரவசராய், வைசியர்களைப் பார்த்து "வாரீர் வைசியர்காள், இவர் உங்கள் மரபின் பிள்ளையல்லர்; ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் கலையென் றறியுங்கள்; இவர் அநேகரைக் கிருதார்த்தராக்கவும், வேதாகமங்களிற் கூறிய சிவதரும முதலியவற்றைத் தம்மொழுக்கத்தால் உலகினற் குபதேசிக்கவும், முமுட்சுக்களுக்கு ஞானனுக்கிரகஞ் செய்

யவுமே அவதரித்திருக்கின்றனர். ஆனுல் யான் கூறிய விதனை நீங்கள் சிலகாட்களிற் பிரத்தியட்சமாய்க் காண்பீர் கள்'' என்று கூறினர். அன்று தொடங்கிப் புண்ணியசீலர்க ளான வணிகருட் பலர் அவரைச் சிவமே யெனக் கண்டு வழிபட்டு ஆண்டவரெனப் பெயரிட்டு வழங்கி வந்தனர்.

இவ்வாறு வழங்கிவர, பின் ஆண்டவர், தமது நண்ப ராகிய நல்லான் செட்டியாருடன் பொருள்வைத்த சேரிக் குச் சென்று, தம்மாசிரியரைத் தரிசித்து வணங்கி, பின் தமது கடையிற் சென்று வியாபாரஞ் செய்யத் தொடங்கி, அதில் வரும் இலாபத்தைத் தமது ஆசிரியர் குடும்பத்திற் கும் தமது நண்பர்கள் குடும்பத்திற்கும் தமது குடும்பத் திற்குமாகக் கொடுத்து வருவர். இவர் வியாபாரம் செய்து கொண்டிருக்கினும் குரு சந்நிதியில் நிரந்தரம் சிரவண மனனுதிகளைச் செய்து வருவதிலேயே கருத்துடையவரா யிருப்பர். ஒருநாள் ஆண்டவரது திருமேனியிற் சுர உபாதி யுண்டாயிரவில் தங்கள் கடையிற் சயனித்திருக்கும்போது அருகிலோர் பிராமணக் கன்னிகை யிருக்கக் கண்டு "அம்மா நீ யார்'' என்று வினவினர். அதற்கு அக்கன்னிகை "யான் வசிப்பது காரைமாநகரம், உமக்குச்சுரங்கண்டிருப்பதாகக் கேள்வியுற்று அதனை நிவிர்த்திக்க ஜலங்கொண்டுவந்தேன்'' என ஆண்டவர் சற்றுலோசித்தார். அப்போது அப்பிரா மணக் கன்னிகை வடிவங்கொண்ட கொப்புடையம்மை யார் "இச்சலத்தை அருந்தக்கடவை'' என்று கொடுத் தருள, சுர தாபத்தால் வாங்கிப் பருகி நிமிர்ந்து பார்க்க அக்கன்னிகையின் திருவுருக் கண்டிலர். சுரம் உடனே நின்றுவிட்டது. சூரியோதயமானவுடன் ஆசிரியர் கிரகத் திற் கெழுந்தருளி அவர் சந்நிதியில் நடந்தவாறு விண்ணப் பிக்க, அதனைக் கேட்ட ஆசிரியர் மகிழ்வுற்று இவ்வாறரு

ளியது கொப்புடை யம்மைதானெக்கூற அச்சந்நிதியிற்றனே அவ்வம்மையார்பேரில்,

அறுசீர்க் கழிநெடிலடி லாசிரிய விருத்தம்.

"ஆலோ னிறந்து முமைபாகத் தண்ண லிறந்துங் கமலமுறை
நாலா னனத்தோன் முடிந்திறந்து நார தாதி யோரிறந்துங்
காலா திகளு மொழிந்திறந்துங் ககன மாதி யழிந்திறந்து
மாலோ கங்க ளிறந்துநின்று யம்மே கொப்பை யுடையாளே"

என்னும் கவியைத் திருவாய்மலர்ந்தருளினர்.

இவ்வாறு குருகுலவாசஞ்செய்து அத்தியான்ம சாஸ்திரங்களை அப்பியசித்து வருங்காலத்து, மகாகாவியமான ஞானவாசிஷ்டத்தை யப்பியசித்தலின்றி ஞான சித்தி யுண்டாகா தென்னும் அபிப்பிராயத்தை விளக்க, தமது குருமூர்த்தியாகிய உகந்த குரு சுவாமிகளை நமஸ்கரித்துத் துதித்து நன்முகூர்த்தத்தில் வாசிஷ்டத்தை யாரம்பித்து ஐயந்திரிபறப் பொருள்கேட்டுவந்தனர்.

இங்ஙனம் ஆப்தமுலிய நால்வகைப் பணிவிடைகளால் குருமூர்த்திகளைச் சந்தோஷிப்பித்து வினயத்தோடு வாசிஷ்ட சிரவணஞ் செய்து வருங்கால், ஆண்டவருக்கு இராகவனைப்போல் கொஞ்சங்குறையப் பதினாறு வருடங்களாயின. வாசிஷ்ட சமாப்தி காலமும் நெருங்கினது. அப்போது ஆண்டவர் வாசிஷ்ட சமாப்திசெய்யக்கருதி, சுபதின மேற்படுத்தி அதற்குப் பணம் வேண்டுமென்று பிதாவைக் கேட்க, அவர் ஒன்றும் பேசாது மௌனமா யிருந்தனர். இருக்கவே, ஆண்டவர் "காது செவிடாய் விட்டதா" என்று சொல்லி, ஆசிரியர் மனைக்குச் சென்றுள்ளவாறே முடியுமென்றிருந்தனர். உடனே அவர் பிதாவிற்குக் காதுகளிரண்டும் செவிடாயின. அவர் ஆண்டவரிடத்து அச்சமும் அன்பும் மேலிட்டு, "கெட்டேன் எனது

உலோப குணமல்லவா இங்ஙனஞ் செய்வித்தது'' என்று தன்னை வெறுத்து, இனி இது தீர்தற்கு ஆண்டவர் அருளையன்றி வேறு உபாயமில்லை யென்று நிச்சயித்து உகந்த குருசுவாமிகள் திருமனைக்குச் சென்று நடந்தவாறு கூறி, ஆண்டவர் கரத்தால் விபூதி அளிப்பித்தல் வேண்டுமென்று பிரார்த்தித்துத் திருடிகளில் வீழ்ந்து அடியற்ற மரம் போற் கிடந்தார். அப்போது சுவாமிகள் மனமிரங்கி "அங்ஙனம் செய்குதும், அஞ்சற்க'' என்று அபயங் கூறி, ஆண்டவரை யழைத்து "உனது பிதாவிற்கு உண்டாகிய ஏருத்தந்திர விபூதி தருக'' என்று ஆஞ்ஞை செய்ய, அவ்வாறே ஆண்டவர் குருவின் வாக்கியப்படி விபூதி கொடுத்த மாத்திரத்தில் காதுகள் மூடித் திறக்கப்பட்டவை போன்று ஓசை யுணர்தற் குரியவாயின. ஆகவே ஆண்டவரைப் புத்திரபாவத்தாற் கட்டித் தழுவி, "உனது மகிமையை யறியாததினாலும், புத்திரனென்னும் பாவனையினாலும், திரவிய லோபத்தினாலும் உனதுவார்த்தையில் இலக்ஷியமின்றி உதாசீனனாயிருந்தேன்; இனி உனது கருத்தின்படி நடக்கக் கடமைப்பட்டவனாயிருக்கின்றேன்'' என்று வேண்டிய திரவியங்களைக் கொடுக்க, அவர் அதனைக் கொண்டு, நியமித்த முகூர்த்தத்தில் வாசிஷ்டத்திற் கூறியுள்ள சமாப்திலக்ஷணப்படி திருவண்ணாமலை ஈசானியதேசிகர் முதலிய அளவிறந்த சாதுக்களை அங்கங்கு திருமுகம் அனுப்பி வரவழைத்து, தமது குருமூர்த்திகளை உயர்ந்த பீடத்தில் எழுந்தருளச் செய்து, பால் தயிர் முதலியவற்றாலும் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களாலும் அபிஷேகஞ் செய்வித்து, திவ்யமான ஆடையாபரணங்களால் அலங்கரித்து உபசாரஞ் செய்து, வந்த சாதுக்கள் முதலியோருக்கும் ஏற்றபடி யுபசரித்து மிகச் சிறப்பாய் முடித்தனர்.

முடிந்தபின்னர் ஆசிரியர் உத்தரவின்படி தமதூரில் வந்திருக்கும்போது அவ்வூர் கொப்புடையம்மை பேரிலும் தமது குலதெய்வமாகிய அரியக்குடி ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியின் பேரிலும் அநேகதோத்திரக் கவிகளைச் செய்தருளினர். அவற்றை ஆண்டவர் "சுவானுபவத் திருவாக்கு" என்னும் நூலிற் காண்க.

ஆண்டவர் ஒருநாள் நல்லான் செட்டியாருடன் கோவிலூருக்குச் சென்று அங்கிருந்த ஆலயத்துட் பிரவேசித்துக் கொற்றவாளீசுவரையும் திருநெல்லையம்மையாரையும் தரிசித்துப் பேரானந்தமுற்று, இவ்வாலயம் மிக இரமணீயமாயும், புராதனமாயும், தனித்து வசித்தற்குரிய ஆரணியங்களை யுடையதாயும் காணப்படுகின்றது. ஆதலால் இனி நாம் சோமவார சுக்கிரவாரங்கடோறும் வந்து தரிசித்துப் போவோமென்று நல்லான்செட்டியாருடன் வசனித்துக் கொண்டு ஊர்வந்து சேர்ந்து அன்றுமுதல் அவ்வாறே தரிசித்துவந்தனர். பின்னர்ப் பொருள் வைத்தசேரியிற் சென்றிருக்குங்கால் குருமூர்த்திகள் கலியப்தம் ௪௲௯௱௰௯ சாலிவாகன சகாப்தம் ௧௲௭௱௪௰ வெகுதானியவருடம் பங்குனி மாசம் ௨௰௯௳ ஏகாதசிதிதி மகநக்ஷத்திரம் என்னுமிவை பொருந்தியசுபதினத்தில் பரப்பிரஹ்ம சமரச சுபாவமடைந்தனர். ஆண்டவர் அவரது திருமேனியைச் சமாதி வைத்து, திருவண்ணமலை ஈசானியசுவாமிகளுக்கும், அவர் மாணக்கர்களாகிய சிவகுருசுவாமி பரசுராம சுவாமிகளுக்கும், நாகை அருணாசல சுவாமிகள் திருவாரூர் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் முதலிய பெரியோர்களுக்கும், தமது நகரத்திருக்கும் அடியார்களுக்கும் திருமுக மனுப்பி வரவழைத்து, மண்டலாபிஷேக பரியந்தமான சகல கிருத்தியங்களையும் குருபூஜை மாகேசுர பூஜைகளையும் சாஸ்திர

விதிப்படி சிறப்பாகச் செய்து முடித்து, அக்குரு மூர்த்தியின் பேரில்,

எழசீராசிரிய விருத்தம்.

தடமுயர் கடல்சூழ் பொருள்வை நன்னகரந்
  தனின்மநுத் தேகமாய் விளங்கித்
திடமுடன் சுருதி சாஸ்திர வேதாந்தஞ்
  சிந்தையி லனுபவந் தெளிந்து
படிதனிற் றனைவந் தடுத்தவர்க் கிரங்கிப்
  பரமசற் குருவதா யுணர்த்தி
யடியவ ரடிகட் கேயுகந் தாட்சி
  யரன்பதி கயிலை வாழ்ந்தனனே.

என்னும் பாசுரத்தையும் செய்தருளினர்.

அதன்பின் அங்கு வந்திருந்த பெரியோர்கள் யாவரையும் பூசித்து உபசரித்துத் தத்தம் இடங்களுக்கு அனுப்பிவைத்து, தமது குருமூர்த்தியின் அதிஷ்டானத்திற்கு ஆலயம் எடுப்பித்து, அவ்வாலய சம்ரக்ஷணையின் பொருட்டு மடாலயம் ஒன்றியற்றி, சிதம்பரம் கேணி மடத்தில் வசித்துக்கொண்டிருந்த விவேக வைராக்கிய சம்பன்னரான ஸ்ரீ வீரபத்திர சுவாமிகளை அந்த ஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து, மிகுதியான திரவியங்களையும் பூமிகளையும் கொடுத்துப் பரம்பரையாகக் குருமூர்த்தியின் ஆராதன முதலியவற்றை நடத்திவரும்படி ஏற்படுத்தி, அங்கு சிலகால மிருந்து மீண்டும் காரைக்குடிக்கு எழுந்தருளி அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்துகொண்டிருந்தனர்

அங்ஙன மிருக்கையில் ஒருநாள் தம்மிடத்து அத்தியந்த பத்தியுடைய நல்லான் செட்டியாரை அழைத்துக் கொண்டு, சோமவார சுக்கிர வாரங்கடோறும் தரிசனம் பண்ணிவரும் வழக்கப்படி கோவிலூருக் கெழுந்தருளி, இராஜகட்க பரமேசுவரரையும் சாலிவாடீசுவரியையும் தரி

சனஞ் செய்துகொண்டு, தமது நகரத்திற்கு வரப் பிரயத் தன்ப்படுங்கால், மழை மிகுந்து விடாதுபெய்தமையால் அவ்விடத்திற்றுனே தங்கி அவ்விரவில் அவ்வம்மையின் சந் நிதியிலிருந்த கூரைக் கொட்டகையில் தங்கியிருக்க, அக் கொட்டகை எங்கும் ஒழுகியிருத்தற் கிடமில்லாமல் சேருகி விட்டமையின், அவ்விரவு முழுதும் நித்திரையின் றியிருந்து சூரியோதயமானவுடன் நல்லான் செட்டியாரால் தொழிலா ளரை வரவழைத்து, அக் கொட்டகையைப் பிரித்து முன் போலவே பனையோலையினல் கட்டும்படி உத்தரவு செய்த னர். தொழிலாளர் பழைய ஓலைகளை அப்புறப்படுத்தும் பொருட்டு அக்கொட்டகையின் மீதேறவே, அக் கொட்ட கையின் கால்கள் அடியற் றிருந்தமையாலோ, அல்லது திருநெல்லையம்மையார் இம்மூர்த்தியைக்கொண்டு அதனைக் கற்பணை பாக்கிக்கொள்ளத் திருவுளங்கொண்டமையாலோ அறியேம். அஃது அடியோடே சாய்ந்தது ஆண்டவரும் அதனைக்கண் டாச்சரிய முற்றுத் திருநெல்லை யம்மையின் திருவுள்ளக் குறிப்பை யுட்கொண்டு நல்லான் செட்டியா ரைப் பார்த்து "இதனைக் கற்பணி யாக்குவித்தல் வேண் டும்; அதற்குத் தக்க திரவியம் சேர்த்துக்கொண்டு ஆரம் பிப்போம்." என்று கூறித் தமது நகரத்திற்குச் சென் றனர்.

இவ்வாறெண்ணிச் சென்ற ஆண்டவர் அதனை மறந்து, தமது அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்துகொண் டிருந்துவிட்டனர். அங்ஙனமிருக்கத் திருநெல்லை யம்மை யார் இத்தொண்டரைக் கொண்டே ஜீர்ணமாயுள்ள திருப் பணி யனைத்தையும் பார்ப்பவருள்ளம் களிக்கும்படி புதுப் பிக்கவேண்டு மென்னும் கருத்துடையவராய், ஓர் பிரா மணக் கன்னிகை வடிவெடுத்து, ஆண்டவர் கிரகத்திற்

கெழுந்தருளி, அவர் மாதாவைக் கண்டு, உன் புத்திரன் எங்கே யென்று கேட்க, அவ் வம்மையார் வெளியே போயிருக்கின்றானென் றினிமையாய்ச் சொல்லி, அக் கன்னிகையின் திவ்விய வடிவத்தைக் கண்டு பரவசமுற்று நின்றனர். திருநெல்லை யம்மையார் அவ் வம்மையாரைப் பார்த்து "உனது குமாரன் கோவிலூருக்குத் தரிசனத்தின்பொருட்டு வந்தபோது வெயிலுக்கும் மழைக்கு முதவியா யிருந்த கொட்டகையைப் பிரித்து அப்பாற்படுத்தி விட்டுக் கற்பணியாக்குவிப்பே னென்று வந்தவன், அதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்யாமலிருப்பது உசிதமா? இனி விரைவில் வந்து, அத் திருப்பணியைத் தொடங்கச்சொல்லுக" என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். ஆண்டவர் கிரகத்திற்கு வந்தவுடனே மாதா நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லக்கேட்டு, மயிர்க்குச்செறிந்து கண்ணீர் வார ஆனந்த பரவசராய், பிரமாதிகளாலுங் காண்டற்கரிய ஞானசொரூபியாகிய அவ்வம்மையாரைக் கண்ட நீயே மகா பாக்கியவதி என்று தாயாரை வியந்து கொண்டாடி,

நன்கடம்பனைப் பெற்றவள்பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக்கோயிலான்
றன்கடனடி யேனையுந் தாங்குத
லென்கடன்பணி செய்துகிடப்பதே.

என்று திருநாவுக்கரசுநாயனார் தாமும் ஒழுகி உலகத்திற்குபதேசித்தவாறே யாமும் செய்தல் வேண்டுமெனத் திருவுளங்கொண்டு, அவ்வம்மையின் சந்நிதியிலிருந்த கொட்டகையை முன்கருதியவாறே கற்பணி யாக்குவித்தலோடு மற்றுமுள்ள திருப்பணிகளையும் முடிப்பிக்க வேண்டுமென் றெண்ணி, ஸ்ரீகொற்றவாளீசுரர் திருநெல்லையம்மை ஆலயத் திருப்பணி விஷயமாய்த் தனவணிகர்களும் மாணுக்கர்களும் கொடுத்த திரவியத்தைக்கொண்டு, அம்மையின் கர்ப்பக்

கிரகம், இராஜகோபுரம், விமானம், வாவிகூபதடாகங்கள், நந்தனவனங்கள், தென்னஞ்சோலைகளால் சூழப்பட்ட இராஜவீதிகள், இரதம், மடாலயம், பிரமாலயம் முதலிய அநேக திருப்பணிகளை உலகினராற் கணிக்கப்படாத சிறப்பினையுடையதாய்த் தொழிலாளர் மனங்களிக்கத் திரவியங்களைக்கொடுத்துச் செய்து முடித்தனர். இவ்வாறே கல்லல் கானாடு காத்தான் சாக்கை முதலிய க்ஷேத்திரங்களிலும் திருப்பணிகளைச் , செய்வித்துத்தம்மை யடைந்தவர்களை அன்ன முதலியவற்றால் ஆதரித்து அநுக்கிரகஞ் செய்துகொண்டிருந்தமையால், இவர் மகிமை உலகெங்கும் பரவியது. அதனைக் கேள்வியுற்றுத் தேவிகோட்டை இராமநாதன்செட்டியார் முதலிய அநேக அடியார்கள் ஆண்டவரைச் சரணடைந்தார்கள். இவ்வாறு ஆண்டவர் தாம் திருப்பணிகளைச்செய்வது மன்றித் தம தன்பர்களையும் தத்தம் கிராமங்களிலும் ஏனையக்ஷேத்திரங்களிலும் தேவாலயங்களையும், சாதுக்கள் வசித்துச் சிரவண மனனாதிகளைச் செய்துகொண்டிருத்தற்குரிய மடங்களையும், நந்தனவனங்களையும், வாவிகூப தடாகங்களையும், சத்திரம் பாடசாலை முதலியவற்றையும் ஏற்படுத்தி வருவதோடு சாஸ்திரவாயிலாகச் சதாசாரங்களையும் அனுஷ்டித்து வரும்படி ஆஞ்ஞாபிக்க, அவ்வாறே அவர்களும் அப்போது ஆங்காங்குச் சிவாலயம் மடாலய முதலியவற்றை யியற்றியதுமன்றி * இப்போதும் இயற்றி வருகின்றார்கள்.

---

* இவ்வாறு ஆண்டவர் காலமுதல் நடந்து வருவதைக் கண்ணுற்றே சமீபகாலத்திருந்த வரகவி சேந்தினி பழநியப்பஅய்யா வென்பவர்

விருத்தம்.

மடமுண்டோசிவாலயங்கள் மிகுதியுண்டோவாசிட்டம்
படிப்பதுண்டோமனத்துண்ஞானத்
திடமுண்டோநால்வர்தமிழ்ப்படிப்பாருண்டோதிவ்வியமா
முதாரமுதற்குணங்களுண்டோ
விடமுண்டோனடியர்குழாமிகுதியுண்டோமெய்யறஞ்சத்
திரம்விரைப்பூங்காவுமுண்டோ
வடகைலைக்கிறைவனெனுமுத்துராமவள்ளறிருக்
கழனிநகர்வாராமுன்னம்.

என்னுஞ் செய்யுளை யியற்றினர்.

தேவிகோட்டை இராமநாதன்செட்டியார் ஆண்டவ ரைத் தரிசித்து, சுவாமின், தெய்வத்தைக் கண்டு ஆராதித் தற்குரிய மார்க்கம் யாதென்று பிரசனஞ்செய்ய, அதற் காண்டவர்

வெண்பா.

தெய்வ வடிவறிந்தத் தேவதையைப் பூசைபண்ணித்
தெய்வவடிவாந் திறங்கேளீ—ரையமினூல்
சற்குருவாற் றூனுணர்தல் சந்ததமும் சிந்தித்த
னிற்குமது வான நிலே.

என்னும் வெண்பாவைத் திருவாய் மலர்ந்தருளினர். பின் னொரு காலத்தில் தேவிகோட்டை அருணசல சுவாமிக ளும், கண்டனூர் அருணசல சுவாமிகளும் ஆண்டவரைச் சரணடைந்து சற்சாஸ்திரம் பயின்று வந்தனர். ஓர்காலத் தில் ஆண்டவர் அவ்வூர் அதளக் கண்மாய்க் கரையிற் பூஜை நைவேத்தியமின்றி ஆலயமில்லாது வெய்யிலிலிருந்த அகத்தீசுர ரென்னும் மகாலிங்கத்தை எடுத்துவந்து, கொற்றவாளீசுரர் ஆலயத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்று கருதிப்போகுங்காலத்துப் பூர்வம் பஞ்சாக்கரநாயகி ஆல யத்திற்கு வடபால் குப்புச்சி ஊருணிக்கருகில் மறவன்

கோட்டையிருந் தழிந்துபோக, அங்கிருந்த கைலாசநாதர், நித்திய கல்யாணியம்மை யாலயம் ஜீரணமாய் ஒரு கால பூஜை மாத்திரம் நடந்து வந்தமையால் அவ்வாலயத்தி லெழுந்தருளியிருந்த அம்மையார் வெண்பட்டாடை யுடுத்து அந்தணர் கன்னிகையாய்த் திவ்ய ரூபத்துடன் நேரில் பிரசன்னமாய் ஆண்டவரை நோக்கி, அப்பா, ஒரு கும்பஜலத்திற்கும் ஒரு உருண்டை யன்னத்திற்கும் இங்கி ருவரும் காத்திருக்கிறோமென்று கூறி அந்தர்த்தான மாயி னள். உடனே ஆண்டவர் கைலாசநாதரையும் அம்மை யாரையும் எழுந்தருளப்பண்ணி, கொற்றவாளீசுர ராலயத் திற்கும் திருநெல்லையம்மை யாலயத்திற்கும் மத்தியில் அவ் வூரார் வழிபட்டுவந்த பிரமக்காளியென்னும் ஓர் துஷ்ட தேவதையின் பீடமொன்றிருக்க, அதனையெடுத்துவிட்டு, அந்தஸ்தானத்தில் கைலாசநாதருக்கும் நித்தியகல்யாணி யம்மையாருக்கும் ஆலயமெடுப்பித்து அதில் ஸ்தாபித்து அபிஷேக நைவேத்திய முதலியன எப்போதும் நடந்து வரும்படி செய்வித்தனர். முன்னர்க் கைலாயநாதரையும் நித்தியகல்யாணி யம்மையாரையும் மறவன் கோட்டையி லிருந்து கொண்டுவருங்காலத்து, அங்கிருந்த பஞ்சாகர நாயகி அசரீரியாய் ஆண்டவரைப்பார்த்து "யான்மாத் திரம் இங்குத் தனித்திருப்பது உமக்கு நீதியா" என்று சொல்ல, அதனை ஆண்டவர் கேட்டு, அவ்வம்மையாரையும் எடுத்துவந்து ஸ்தாபிக்குங் கருத்துடையவராய் ஆலயங்கட் டுவிக்குங்காலையில், ஒருநாள் ஆண்டவரைத் தரிசிக்கவந்த சிஷ்யராகிய நல்லான் செட்டியார் திருநெல்லை யம்மை யார் திருப்பணிக்காகவந்த திரவியத்தைப் பிடாரிக்குச் செலவிடுதல் நியாயமாவென்று சொல்ல, ஆண்டவர்

நேரிசை கட்டளைக்கலித்துறை.

கண்டபொருளல்லகாணுப்பொருளல்லகண்டபொருள்
மண்டியிருளல்லமாயுமொளியல்லமன்னுமொளி
பண்டென்பதுமல்லவின்றென்பதல்லபராபரமா
மண்டமடங்கவடங்காப்பெருவெளியையுளியே.

என்னுங் கவிபைக்கூறி "அடா நல்லான், இத்தன்மையான ஐயுளியம்மையாரை நீ தாழ்வாகக் கருதுவது உனது அறியாமையே !" என்று நகைத்து அத்திருப்பணியை முடித்து, அவ்வம்மையாரை ஆலயத்தி லெழுந்தருளப்பண்ணிக் கும்பாபிஷேகஞ் செய்வித்து, கொற்றவாளீசுவரர் ஆலயத்திலிருந்து ஒருகாலபூஜை எப்பொழுதும் நடத்திவரும்படி நியமித்தனர். அவ்வாறே இப்பொழுதும் நடந்து வருகின்றது.

பின்னர், முன் தாம் கருதியபடியே அதளக்கண்மாயிலிருந்த அகத்தீசுரரையும் எடுப்பித்து வந்து ஆலயத்துள் ஓரிடத்துப் பிரதிஷ்டை செய்து, தினந்தோறும் பூஜை நைவேத்தியங்கள் நடந்துவரும்படி செய்தனர்.

அக்காலத்து அடியார்களுக்கு வேண்டிய உதவியை நிரந்தரம் செய்துவந்த இராயபுரம் அப்புக்குட்டி செட்டியாருக்கு உண்டாகிய புத்திர சோகம் நீங்க,

கனவிற்குழவிமலடிபெற்றுளுட்களித்தவள்தா
னனவிற்கருதப்பொய்யானதுபோனனவினுற்ற
தனமிக்கமக்களும்பெண்டிருஞ்சுற்றமுந்தன்னுடம்பும்
இனமுற்றவென்னையறியப்பொய்யாகியிருந்ததுவே.

என்னுங்கவியை எழுதியனுப்ப, அதனை அவர் பார்த்துப் புத்திரசோக நீங்கி யிருந்தனர்.

ஒருநாள் ஆண்டவரது சிஷ்யராகிய பள்ளத்தூர் சின்னய்யா வென்பவர் ஆண்டவர் திருமுகநோக்கி, "சுவாமி, பேததிருஷ்டி எப்போது நீங்கும்?" என, ஆண்டவர்

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

விண்ணாதி பூதமெலாஞ் சிவமே யாகு
மெய்யுருவும் பொய்யுருவுஞ் சிவமே யாகும்
கண்ணான வேதமெலாஞ் சிவமே யாகுங்
கருதுகின்ற நினைவெல்லாஞ் சிவமே யாகு
மெண்ணிறந்த பேதமெலாஞ் சிவமே யாகு
மிப்படியே தினந்தோறுங் காண்பா னாகிற்
பெண்ணாண மலியாகும் பேத மின்றிப்
பிரமமய மாதறிண்ணம் பேத மின்றே.

என்னுங் கவியைத் திருவாய்மலர்ந்தருளினர்.

ஆண்டவர் கொற்றவாளீசுர ராலயத் திருக்கும் பொழுது முக்கிய சிஷ்யரான பள்ளத்தூர்ச் சின்னய்யா வென்பவர், சுவாமின், "யான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் எவ்வாறு நீங்கும்" என,

நேரிசை வெண்பா.

தன்மயமாஞ் சத்தி தானினைக்க நாமவுரு
மின்மயம்போற் றோன்றி விளிந்திடுமே—யென்மயமே
யாமே யவையெல்லா மானல்யா னும்மெனதும்
போமே சிவமயமாய்ப் போம்.

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினர்.

ஒருநாள் சுவாமி தரிசன நிமித்தம் பிள்ளையார்ப்பட்டி நகரத்தார் பிரார்த்திக்க, அங்கெழுந்தருளி அவ்வூரில் வசித்துக் கற்பக விநாயகரைத் தரிசித்து,

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகண் முழுதகற்று முகத்தினானை, யற்பசுகத் தெனையழுத்தா வைங்கரனைப் பிறப்பவமு மகற்றுங் கோவைச், சொற்பழுது புரியாத வணிகர்குலந் தினம்பணியுந் துணைத்தாளானைக், கற்பகத்தின் மிடியகற்றுங் கற்பகமா விநாயகனைக் கருத்தில் வைப்பாம்.

என்னும் கவியைத் திரிவாய்மலர்ந்து, மீண்டுங் கோவிலூரையடைந்து வசிக்குங் காலத்தொருநாள் மதுபுஷ்கரணியின் கீழ்க்கரையில் ஈசானியதிக்கில் நள்ளிரவில் படியின்மீதுட்கார்ந்திருக்குங் காலத்து, தமக்கெதிரில் அகண்டைகரசச்சிதானந்த கனீபூதராகிய கொற்றவாளீசுரர் கோடிசூரியப்பிரகாசராய், சந்திரசூடராய், கங்காதரராய், காளகண்டதிரிநேத்திரதாரியாய், உமாசகித திவ்ய மங்கள விக்கிரகராய், இடபவாகனத்தி லெழுந்தருளிப் பிரசந்நமாயினர். அப்போது ஆண்டவர் அதிபக்தி விநயத்தோடு எழுந்து வணங்கித் துதித்து ஆனந்த பரவசராய் நிற்கக்கொற்றவாளீசுரர் அந்தர்த்தானமாயினர்.

ஆண்டவர் ஒருநாள் பரணில் நித்திரை செய்கையில் கோவிலூருக்கு மேற்கில் கால்யோசனை தூரத்துள்ள சாளியென்னுங்கிராமத்திலிருக்கும் அஞ்சாத பெருமாளென்னும் ஐயனர், ஆண்டவர் முன் தோன்றித் தன் முதுகில் புற்று வளர்ந்திருப்பதைக் காண்பித்து, "இவ்வாறு சிதலரிக்க யானிருப்பது நீதியா?" என, அதற்கு ஆண்டவர் "நீர் யார்" என்று கேட்கவும், யான் "அஞ்சாத பெருமாள்" என்று சொல்லி அந்தர்த்தானமாயினர். ஆண்டவர் உடனே விழித்தெழுந்து நல்லான் செட்டியாரை வரவழைத்து "உன் குலதெய்வமாகிய அஞ்சாத பெருமாள் ஆலயத்திற்கு வாவென்று அவரை அழைத்துக்கொண்டு போய், அவ்வையனர் ஆலயத்தின்பின் சென்று, அவ்வாலயச் சுவரை உதைத்துத் தள்ளி, சுவாமி முதுகில் புற்று வளர்ந்திருப்பதைப் பார்" என்று காட்டி "இப்படி வருவானேன்" என்று கேட்க, நல்லான் செட்டியார் "இவ்வாலயம் கட்டி முடித்தற்கு இத்தனை தொகை யென்று குத்தகையாகப் பேசி, அத்தொகையைத்தச்சனிடம் கொடுத்துவிட்டோம்; அவன் அஜாக்கிரதையினுல் இவ்வாறு வந்தது"

என்று கூறினர். கூறவும் ஆண்டவர், தச்சனையழைத்துக் கண்டித்து "விரைவில் இவ்வாலயம் செய்து முடிக்கவேண்டும்" என்றுத்தரவு கொடுத்துவிட்டுக் கோவிலூருக்கு எழுந்தருளினர். அந்தத்தச்சன் பின்னரும் ஆலயங்கட்டத் தொடங்காதிருந்தமையால் அவன் மனைவியின் கர்ப்ப முதிரமாய் ஒழுகத் தொடங்கிற்று. தச்சன் உடனே பயந்து "பெரியோர் வார்த்தையின்படி நடவாததினாலன்றோ இவ்வாறு நேரிட்டது?" என மனங்கலங்கி, ஓடிவந்து ஆண்டவர் பாதத்தில் விழ்ந்து, நிகழ்ந்ததைச் சொல்லி யழுது, "அடியேன் அபராதத்தைப் பொருத்தருளல் வேண்டும்; இனிக் கணமும் தாமசியாமல் ஆலயஞ் செய்து முடித்துவிடுகிறேன்; என் மனைவியின் கரு வழிந்துபோகாவண்ணம் விபூதி கொடுத்தருளல்வேண்டும்" என, ஆண்டவர் கருணைக்கடலாகலின் அப்படியேவிபூதி கொடுத்து "இதனை அவள்சிரசிற் றரித்தால் வெந்துபோவாள்; உன் வீட்டின் கூரைமேற் போடுவாயாயின், அவளுக்கு வந்த இடையூறு ஒழிந்து கரு முதிர்ந்து ஆண் குழந்தையைப் பெறுவள்; அதற்கு 'அஞ்சாத பெருமாள்' என்று பெயரிட்டு நல்ல புத்தியோடு பிழைத்திரு" என்று சொல்லி யனுப்பினர். அவன் அவ்விபூதியைக் கொண்டு விரைவிலோடி வீட்டுக் கூரையிற் போடவே, அது எரியத் தொடங்கியது. அதனை அவன் அணைத்து விட்டு உட்புகுந்து தன் மனைவி இரத்தப் போக்கின்றிச் சுகமாயிருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்து, அவ்வையனார் ஆலயத்தையும் விரைவிற் செய்து முடித்தனன். சிலநாளில் ஆண்டவர் உத்தரவின்படி ஆண்குழந்தை பிறக்க அதற்கு 'அஞ்சாதபெருமாள்' என்று நாமமிட்டான்.

இது இங்ஙனமிருக்க, ஒருநாள் திருப்பெருந்துறை அண்ணமலை செட்டியாரென்பவர் கோவிலூருக்கு வந்து,

மடாலயப் பிரவேசத்திற்காக ஆண்டவரைப் பல்லக்கி லெழுந்தருளப்பண்ணித் திருப்பெருந்துறைக்கு அழைத்துச் சென்றனர். அப்போது ஆண்டவர் அவ்வாலயத்துட் சென்று ஆத்மநாதனைத் தரிசித்து,

தொந்தமுங் கடந்த தூயோர் துதித்திடற் குரிய பாத
மந்தமு நடுவு மின்றி யமர்ந்திடு மம்பொற் பாதஞ்
சந்ததஞ் சுகசிற் சத்தாய்ச் சதோதித மான பாதஞ்
சிந்தனைப் படியே தோன்றுந் திருப்பெருந் துறையான்பாதம்.

என்னும் கவிமலரைச்சாத்தி அங்குச் சிலநாள் வசித்து மீண்டுங் கோவிலூருக்கு எழுந்தருளும்போது, இராமநாதன் செட்டியார் ஆண்டவரைத் தமது மாத்தூர்க்கோவிலுக்கு அழைத்துச் செல்ல, அவ்விடஞ் சென்று சுவாமி தரிசனம் பண்ணியகாலத்து,

நேரிசை வெண்பா.

ஐந்நூற்று வீச ரடியிணையைச் சேர்ந்தவுனக்
கெஞ்ஞான்றுநெஞ்சே யிடருண்டோ-பைஞ்ஞாகந்
தாங்கும் புவிவிளங்கச் சஞ்சரிக்கும் பானுகண்ட
தூங்கிமம் போகாதோ சொல்.

என்னும் வெண்பாவை யருளிச்செய்து கோவிலூரை யடைந்தனர்.

அவ்வாறிருக்கையில் திருவீதிக்குத் தென்பால் ஓர் கல்மண்டபமமைக்கத் திருவுள்ளங்கொண்டு முகூர்த்தம் செய்வதற்குத் தேங்காய் கொண்டுவரும்படி போனவர் அச்சமையம் வாராமையால், முகூர்த்தத்திற்கு நியமித்த இலக்கினம் நெருங்கியதே யென்று நினைத்து ஆலயத்தைப் பார்த்தனர். அப்போது அவ்வாலயத்தினின்றும் ஓர் அந்தணர் கன்னிகை கமலத்தில் வெற்றிலையும் பாக்கும் இரண்டு தேங்காயும் தனது கரத்திலேந்திக் கொண்டு வந்தனள். அதனை ஆண்டவர் தமது கைகளாலேற்றுக் கல்மண்டபம்

செய்ய உத்தேசித்த விடத்திற்சென்று நிற்க, அதனைப் பார்த்துக்கொண்டிருந்த குட்டையனுசாரி அவ்வந்தணர் கன்னிகையைப் பார்த்து "அம்மே நீயார்?" என்று வினவ, அக்கன்னிகை அந்தர்த்தான மாயினள். அப்போது ஆண்டவர் தமது திருக்கரத்தால் அம்மே! மாறாத அன்னதானம் நடக்கவேண்டுமென்றுகூறித் தேங்காயுடைத்து முகூர்த்தம் செய்தருளினர். அன்று முதல் அன்னதானம் அமோகமாய் நடந்து வருவது இன்றும் பிரத்தியக்ஷமாம்.

இவ்வாறு முகூர்த்தம் செய்து மடாலயத் திருப்பணி நடந்துகொண்டிருக்கப் பகற்போதெல்லாம் தென்னஞ் சோலை நந்தவனம் ஆரண்யமுதலிய நிர்ஜனப் பிரதேசத்தை யடைந்து தனித்து அகநோக்கொழியாதிருப்பர். அஸ்தமன சமயத்தில் ஆலயத்திற்கு எழுந்தருளிப் பிரதக்ஷண நமஸ்காராதிகளைச் செய்து, தீபாராதன மாகுமளவும் அம்பாள் சந்நிதியிலிருந்து அம்மையாரை நமஸ்கரித்து மடாலயத்திற் கெழுந்தருளுவர். அப்போது அடியார்கள் "அடியேங்கள் உய்யும் பொருட்டு உபதேசித்தருளல் வேண்டும்" என்று வணங்கிப் பிரார்த்திக்க, கருணையோடு தமது திருவாக்கினுல் உபதேசமொழிகளைப் பிரகடனஞ் செய்வர்.

அந்நாட்களில் முன்னரே சரணடைந்தவர்களாகிய தேவிகோட்டை அருணுசல சுவாமிகளும், கண்டனூர் அருணுசலசுவாமிகளும் பஞ்சதசி கைவல்ய முதலிய அனேக சாஸ்திரங்களைப் பாடங்கேட்டு, பரணிப்பிரபந்தமும் பாடங் கேட்கவேண்டுமென்னுங் கருத்தினராய், ஓர் அந்தணர் முகமாய்க் குன்றக்குடியில் திருவண்ணுமலை யாதீன பரம்பரை ஸ்ரீ ஆறுமுக தேசிகரிடத்தில் அந்நூலிருப்பதாகக் கேள்வியுற்று, அங்குச்சென்று அவ்வாறுமுக சுவாமிகளை வணங்கி அஞ்ஞவதைப்பரணியென்னும் பிரபந்தம் வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது அவ்வாறுமுக சுவாமி

கள் மந்தகாசத்தோடு "நீங்கள் அஞ்ஞவதைப்பரணிபடித் துத் துறவடையப் போகிறீர்களோ "என்று சொல்லி அந் நூலைக் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்டுவந்து ஆண் டவரிடம் பாடங்கேட்டு முடிந்தபின், துறவடைய வேண்டு மென்னுங் கருத்தினராய் ஆண்டவரது சயனஸ்தானத்தை யடைந்து அம்மூர்த்திகளது திருவடிகளைப்பிடித்து கொண் டிருக்கையில் "எங்களிருவருக்குந் துறவடைய உத்தரவு கொடுத்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்திக்க, ஆண்ட வர் "நல்லது அப்படியே செய்யுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வுத்தரவை இருவரும் சிரமேற் கொண்டு மும்முறை நமஸ்கரித்தெழுந்து கொற்றவாளீசுர ரையும் அம்மையாரையும் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தெழுந்து, "நாங்கள் செய்துகொள்ளுந் துறவுமுற்றுப் பெற்று நன்கு விளங்கவேண்டும்'' என்று பிரார்த்தித்து, நெடுங்குடி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் துறவு பூண்டு சிதம்பரஞ் சென்று விதிப்படி நடந்துகொண்டிருந்தமை யால் ஆன்றோர்களால் "துறவுசுவாமிகள்'' எனப்பெயரி டப்பெற்று விளங்கினர்.

இதுநிற்க, ஆண்டவர் பல முறையும் பல பிரபந்தங் களைப்பாடித் தமது சுவாநுபூதியை வெளிப்படுத்தி யிருக் கின்றனர். அவற்றைச் "சுவாநுபவத் திருவாக்கு'' என்னும் நூலினுட் காணலாம். இவ்வாறு ஆண்டவர் கோவிலூர் க்ஷேத்திரத்தில் அடியார்களுக்குச் சாஸ்திரம் சொல்லிக் கொண்டிருக்குங் காலத்து, ஒரு நாள் சாயங்காலம் தமது சரீர வியோகம் சமீபித்திருப்பதை யறிந்து கல்லலையாவை நோக்கி, இப்போது நமது ஆசாரிய பரம்பரையிலுள்ள மகாத்மாக்களையும் மற்றுமுள்ள பெரியோர்களையும் அன் பர்களையும் இங்கு அழைப்பிக்க வேண்டுமென்று ஆஞ்ஞா பித்தனர். அவ்வாறே அவர் அழைப்பிக்க, சிக்கல் வீரபத்

த்திரசுவாமிகள், பசுபதிகோவில் ஆறுமுகசுவாமிகள், திருவிடைமருதூர் பிக்ஷாடசுவாமிகள், குன்றக்குடி திருவண்ணமலை யாதீனத்து வேலாயுத சுவாமிகள் முதலிய மகான்கள் யாவரும் வந்து சமீபத்தில் வீற்றிருக்க, துறவுசுவாமிகள் முதலிய துறவிகளும், நேமத்தான்பட்டி பழநியப்ப அய்யா, கோட்டையூர் அண்ணமலையையா, மதுரைக்குட்டையையா, கருணாநிதி யென்னும் சிதம்பர அய்யா, கல்லல் வெள்ளையப்ப அய்யா, பள்ளத்தூர் முத்து வீரப்ப அய்யா முதலிய இல்லறத்து அடியார்களும் வந்து நமஸ்கரித்து நின்றனர். அவர்களை யிருக்கும்படி ஆஞ்ஞாபித்து, கல்லலையாவைப் பார்த்து "வெள்ளையப்பா, இம்மடாலயத்தில் எப்போதும் பரம்பரையாக அடியார் குழாங்களிருந்து பரிபாலனஞ் செய்து விளங்கி வரவேண்டுமே" என்று வினவ, அதற்கு அவர் "சுவாமிகள் ஆஞ்ஞையின்படி நடந்துகொள்ளுகிறோம்" என்றுகூறினர். அப்போது ஆண்டவர் தம்பக்கலில் நின்ற துறவுசுவாமிகளென்னும் தேவிகோட்டை அருணசல சுவாமிகளைப்பார்த்து, 'அருணசலம் நீ இன்று முதல் இம் மடாலயத்திலிருந்து அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்து வருவாயாக" என்று ஆஞ்ஞாபித்து, கலி (சஞகூாசய௮) சாலிவாகனசகாப்தம் (ஞஎாகூயகூ) பிலவங்கவருடம் உத்தராயணம் பங்குனிமீ ௮௨ பவர்ணமிதிதி பானுவாரம் உத்திர நக்ஷத்திரம் கன்னியாலக்கினம் என்னுமிவை பொருந்திய சுபதினத்தில் பிரமானந்த சிந்துவிற் கலந்தருளினர். அப்போது துறவு சுவாமிகள் கருணாநிதி முதலிய அடியார்களும், ஏனைய பெரியோர்களும் மண்டலாபிஷேக பரியந்தமான விதிகளைமிகச் சிறப்பாய் நடத்திக் களிப்புற்றிருந்தனர்.

* இதனைத் துறவு சுவாமிகளிடம் அன்புபூண்டு சிதம்

* இதனைத் துறவுசுவாமிகள் சரித்திரத்திற் காண்க.

பரத்தில் வசித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் கேட்டு,

சீர்கொண்டசகவருடமாயிரத்தெழுநூறு
சேருமறுபத்தொன்பதிற்
றிருமருவுபிலவங்கவருடமதின்மீனமாந்
திங்களெட்டாந்தேதியிற்
றிரமருவுபானுவாரத்தினுத்திரமெனச்
செப்புநக்ஷத்திரத்திற்
சிறந்தபூரணியெனுந்திதியதனிலினிதுவரு
திகழ்கன்னிலக்கினத்தே
கார்கொண்டபுயல்வண்ணன்மலரயன்வருந்தியுங்
காணுதபெருவாழ்வெனுங்
கறைமிடற்றிறைராசகட்கபரமேசுரன்
கருணையுருவோடமர்ந்து
கனவெழில்கொண்மணிமாடநிலவுசமிவனமெனக்
கழறுமுயர்பதியில்வாசன்
கணிதமறுசீடர்தமதகவிருளேத்தவரு
கருதரியஞானதபனன்
போர்கொண்டகாமக்குரோதலோபாதியாம்
புகல்குற்றநீங்குபுனிதன்
பொறையறிவடக்கமருண்முதலநற்குணமொடு
பொருந்திவளருற்றமுதல்வன்
புவனமூன்றினுமிவன்புகழ்சென்றிடற்கிடம்
போதாதெனச்சிறந்தோன்
பொருவிலாதுயர்சுத்தவேதாந்தசாத்திரம்
போதமிக்குள்ளநிபுணன்
பேர்கொண்டநிர்மலசமாதிசாக்ஷாத்கார
பிரதாபமிகுசிரேஷ்டன்
பெருமைநிறைதருமுத்துராமலிங்கக்குரு
பிறங்கியிடமெத்துவிதநிட்

பிரபஞ்சநிர்விஷயநிஷ்களாதீதமாம்
பெருவெளியதாகிநின்ற
பேசருமகண்டபரிபூரணசுகானந்த
பிரமமாயிலகினனே.

என்னும் ஆசிரியவிருத்தத்தினை யியற்றினர்.

ஆண்டவர் சரித்திரம் முற்றிற்று.

---

உ
சிவமயம்.
ஸ்ரீசற்குருநாதன் றுணை.

# துறவுசுவாமிகள் சரித்திரம்.

ஆண்டவர் பரிபூரணதசை யடைந்தபின் அவ்வாதீனத்திற்குவந்த துறவு சுவாமிகள், கண்டனூர் அருணசல சுவாமிகளுடன் பூர்வாச்சிரமத்தில் வியாபார நிமித்தமாய்த் திருநெல்வேலிக்குப் போயிருந்தனர். அங்கு இருவரு மிக்க சிநேகத்தால் பிரியாத தன்மை யுடையவர்களாயிருந்து கோவிலூரில் ஆண்டவரைச் சரணடைந்து, அனுக்கிரகம்பெற்றுச் சிலகால மங்கிருந்து, பின்னர் அரிய துறவினையடைந்து சிதம்பரக்ஷேத்திரஞ்சென்றிருந்து, ஆண்டவர் உத்தரவின்பேரில் மீண்டுங் கோவிலூருக்கு வந்து சிதம்பர விநாயகர் ஆலயத்தில் வசித்துக்கொண் டிருந்தார்கள். சிலகாலம் சென்றபின்னர் இருவரும் ஆண்டவரிடத்து உத்தரவுபெற்றுச் சிதம்பரஞ்சென்று வசித்துவரும்போது தேவிகோட்டைத்துறவுசுவாமிகள், தம்மைச்சரணடைந்த நித்தியானந்த சுவாமிகள், திருநேல்வேலிச் சுப்பிரமண்ய சுவாமிகள், வளவனூர் ஷண்முக சுவாமிகள், மதுரைச் சுப்பராயசுவாமிகள், கோவிந்தசுவாமிகள் முதலிய துறவி

களுக்கும், பாகநேரி முத்துக்கருப்பையா மதுரைமெய்யப் பய்யா முதலிய கிரகஸ்தர்களுக்கும் நியமமாகத் தினந்தோறும் தர்க்க, யுக்தி, அநுமானங்களோடு சாஸ்திரங்களை அநுக்கிரகித்து வந்தனர். அப்போது கண்டனூர் * சின்னத்துறவுசுவாமிகள் மனனதியானாதிகளின் பொருட்டுத் தனியே யிருக்கவேண்டுமென்று வடக்குக்கோபுரத்தில் மனன தியானாதிகளைச் செய்துகொண் டிருப்பர். பெரிய துறவுசுவாமிகள் முமுக்ஷுக்களுக்கு உபதேசிக்கும் காலந் தவிரமற்றைக் காலமெல்லாங் கேணி மடத்து ஒடுக்கத்தினுள் தியானஞ் செய்துகொண்டிருப்பர். இருவரும் ஆலயத்திற்குத் தரிசன நிமித்தம் போகுங்காலத்து ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வார்கள்; ஆண்டவர் நடத்திவருங் குருபூஜை, திருநெல்லையம்மை யுற்சவ முதலியவற்றிற்கு வருடந்தோறும் போய் வருவார்கள். இவ்வா றிருவரும் சிதம்பரத்தில் வசிக்குங்காலத்துச் சுவேதாரண்ய க்ஷேத்திரத்திற்குச் சென்று ஆலயத்துட் பிரவேசித்துத் திருவெண்காடரைத் தரிசித்துச் சந்நிதானத்தில் நிற்கும்போது ஆதிசைவர் விபூதிகொடுக்கப் பெற்று வெளியில் வந்து வீதியில் பிக்ஷைக்குச்சென்று அகாலமாயினமையால் பிக்ஷ யகப்படாமல் இருவரும் ஆலயத்திற் பிரவேசித்து, அர்த்தசாம தரிசனஞ்செய்து, தீர்த்தத்தில் இரண்டுகை ஜலமருந்திக் குடவரையில் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்தார்கள். அக்காலையிற் சிவபெருமான் அவ்வடியார்கள்மீது கொண்ட கருணையினால் தாம் ஆதிசைவ வேஷங்கொண்டு கமலத்தில் இரண்டு சர்க்கரை

---

* கண்டனூர் அருணாசலசுவாமிகள் சின்ன துறவுசுவாமிகளென்றும் அவ்வா தீனத்திற்குவந்த தேவிகோட்டை அருணாசல சுவாமிகள் பெரியதுறவு சுவாமிகளென்றும் அக்காலத்து அடியார்களால் அழைக்கப்பட்டு வந்தனர்.

யன்னத்தைக் கொண்டுவந்து அவ்விருவர் கைகளிலுங் கொடுத்தனர். அப்போது அவர்கள் அவரை ஆதிசைவரென மதித்து அதனை அன்போடு வாங்கித் தீர்த்தக்கரையிற் சென்று புசித்து, மறுபடியும் நித்திரைசெய்து காலையிலெழுந்து நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு ஆலயத்துட்சென்று சிவபிரானைத் தரிசிக்கும்போது, ஆதிசைவர் இருவரையும் பார்த்து இரவில் எங்கு போஜனஞ் செய்து சயனித்திருந்தீர்களென்று கேட்க, சுவாமிகளிருவரும் ஒருவரையொருவர் பார்த்து இராத்திரி அன்னங்கொடுததவர் இவராயிருக்க, இப்படிக் கேட்கின்றாரே என்று யோசித்து, அவ் வாதிசைவரைப் பார்த்து இராத்திரி இரண்டு சர்க்கரையன்னங்கொடுத்தது தாங்கள் தானேயென்று கேட்டார்கள். அதற்கு அவர் "யான் எப்போது கொடுத்தேன்" என்று பிரதியுத்தரங் கூறினர். அதனைக் கேட்டு இருவரும் இது ஸ்ரீநடேசப்பெருமானது திருவிளையாடலேயன்றி வேறில்லையென்று தம் மனத்துட்கொண்டு, ஆச்சரியத்தையும் பேரானந்தத்தையு மடைந்து, அங்கு சிலநாள் வசித்தும் மீண்டும் சிதம்பரஞ்சென்று அங்குவசித்து வந்தனர். அவ்விருவரும் மற்றொருகாலத்தில் திருவண்ணமலைக் கெழுந்தருளி அங்குள்ள ஆரண்யப் பிரதேசத்தில் வசிக்கவேண்டுமென்று கருதி, அம்மலையை நோக்கிச் செல்லுகையில், மெட்டுச்சாவடியிலிருந்த சேவகர்கள் அவ்வழியாகத்தனியேபோகலாகாதென்று தடுத்தனர். அதற்கிருவரும் எங்களுக்குந் தடையுளதோவென்ன, இடையிற் காவி வஸ்திர மிருக்கின்றதேயென் றச்சேவகர்கள் கூறினர். அப்போது இருவரும் இடையிலிருந்த வஸ்திரத்தைக் களைந்து அவர்கள் முன் வைத்துவிட்டு, திகம்பரிகளாய் அருணகிரியை யடைந்து ஈசான்யசுவாமிகள் மடத்திலும் அம்மலை ஆரண்யங்களிலும் சிலகாலம் ஏகாந்தமாய்வசித்து,

பின்னர்த்திருப்பதி திருக்காளத்தி முதலிய க்ஷேத்திரங்களிலும் கந்தமூலபலாதிகளைப் புசித்துக்கொண்டு சில நாட்கழித்து மீண்டுந் தில்லையை யடைந்து நடனதரிசனஞ் செய்து ஆத்மானுசந்தானபரர்களாயிருந்தனர். அப்போது யாழ்ப்பாணத்தைச்சார்ந்த நல்லூரென்னும் நகரத்தில் வசிக்கும் சைவசித்தாந்த வித்வத்சிரேஷ்டராகிய ஆறுமுக நாவலரவர்கள் ஸ்ரீ நடேசதரிசனத்தின் பொருட்டுச் சிதம்பரத்தை யடைந்து, சிற்சபேசர் திருவீதியி லெழுந்தருளத் தரிசனார்த்தமாக அங்குவநது சேர்ந்தனர். அப்போது துறவுசுவாமிக ளிருவரும் அடியார் குழாங்களோடு நின்று சபாநாதனைத் தரிசித்துச் செல்லுவதை நாவலரவர்கள் கண்காக்ஷியாகப் பார்த்துப் பின்றொடர்ந்து கேணிமடத்திற் சென்று இரண்டு மூர்த்திகளையும் தரிசித்து வணங்கி நின்றனர். அவரைச்சுவாமிகள், "தாம் யார்?" என்று வினவ, அவர் "யான் வசிப்பது யாழ்ப்பாணம் நல்லூர், என்பெயர் ஆறுமுகம், ஸ்ரீ நடேசப்பெருமானை தெரிசிக்கும்பொருட்டு இங்கு வந்தேன்" என்று கூறி நிற்க, அவர்வார்த்தை நயத்தைக் கேட்டு உட்காரும்படி ஆஞ்ஞாபித்ததின் பேரில் சற்றுநேர மங்கிருந்து அவர்கள் பிரபாவங்களைக் கண்டு ஆச்சரியமடைந்து உத்தரவுபெற்றுச் சென்று பின் நாள்தோறும் அவ்வாறே வந்து தரிசித்துப் போவர். சுவாமிகளும் அவரது நல்லொழுக்கத்திற்கு விபப்படைந்து ஸ்காந்தபுராணத்தைத் தினந்தோறும் பகல் பதினைந்து நாழிகைக்குமேல் பிரசங்கஞ் செய்து வரும்படி ஆக்ஞாபிக்க அங்ஙனமே செய்துவந்தனர். சுவாமிகள் அப்பிரசங்கத்தைக் கேட்டுச்சந்தோஷித்து, ஒருநாள் இன்று முதல் புராணப் பிரசங்கம் செய்துவரவேண்டுமே யன்றிப் பாதிரிமார்களுக்குப் பாடஞ்சொல்ல லாகாதென்று உத்தரவுசெய்ய, அவ்வாறே அன்றுமுதல் பாதிரிமார்களுக்குப்

பாடஞ்சொல்லுத லொழிந்து புராணப்பிரசங்கஞ் செய்த லோடு சைவநூல்களும் பயின்றுவந்தனர்.

இவ்வாறு அனந்த அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்து கொண்டு நெடுங் காலம் வசித்துக்கொண்டிருந்தார்கள். அங்ஙனமிருக்குநாளில் ஒருநாள் சின்னத்துறவு சுவாமிகளுக்குச் சிற்சபேசர் பிரசன்னமாய் "நீ காசிக்குச் சென்று கங்காஸ்நானம் பண்ணி விசுவநாதரைத் தரிசிப்பாயாக" என்று உத்தரவு செய்ய, அதனைப் பெரியதுறவு சுவாமிகளுக்கு அறிவித்து விடை பெற்றுக்கொண்டு காசி க்ஷேத்திரத்தை யடைந்து, கங்காஸ்நானம்பண்ணி விசுவநாதரைத் தரிசித்துக்கொண்டு சிலதினமிருந்து, ஒருநாள் அத்தலத்திலிருக்கும் திருவாடுதுரை மடத்து நமச்சிவாயத் தம்பிரானிடத்திற் சென்று, "இந்தத் தேகம் குரோதிஸ்ரீ மிதுனமாசம் (௩கவ) சுக்கிரவாரம் பத்து நாழிகைக்கு வியோகமாய் விடும்; இவ்விஷயத்தை எமது ஞானசாரியர் திருப்பெருந்துறைக் கடுத்த கோவிலூரென்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்றமையால் அவருக்கு ஒரு நிருபவாயிலாகத்தெரிவிக்க வேண்டும்" என்று கூறினர். நமச்சிவாயத் தம்பிரானும் அதற் கிசைந்து அன்று முதல் இரண்டடியார்களை அத்துறவு சுவாமிகளை விட்டகலா திருக்கும்படி நியமித்து, சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பிரகாரம், தேகவியோக மெய்திய தன்மையை யறிந்து ஆனந்தமடைந்து அத்தேகத்தைக் கற்றொட்டியில் அடக்கஞ் செய்து கங்கையிலிறக்கிவிட்டு, இவ்விஷயத்தைக் கோவிலூர் ஆண்டவருக்கு மிக வணக்கத்துடன் ஓர் நிருபம் எழுதித் தெரிவித்தனர்.

இஃது இங்ஙனமிருக்க, சிதம்பரத்தி லெழுந்தருளியிருந்த பெரியதுறவு சுவாமிகள் தம்மோடு இடைவிடாதிருந்த சின்னத்துறவு சுவாமிகள் காசிக்குச்சென்றபின்

அடியார்களுடன் கோவிலூருக் கெழுந்தருளி குருமூர்த்தியைத் தரிசித்து நித்தியானந்தத்தை யடைந்திருந்தனர். பின்னர் ஆண்டவர் பூரணதிசை யடையுங் காலத்து ஆக்ஞாபித்தபடி அவ்வாதீனத்திலிருந்து தம்மை யடைந்த அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்துகொண்டு, ஆண்டவர் கட்டளைப்படி கனிஷ்டராகிய கருணாநிதியை ஆராதன முதலிய கோவிற் காரியங்களைச் செவ்வையாய்நடத்திவரும்படி நியமனஞ்செய்து, மடாலயத்தில் அளவிறந்த அடியார்களுக்கு அன்னமளிப்பித்தும், மற்றும் மடத்திற்கும் கோவிலுக்கும் வேண்டிய காரியங்களைச் சீர்திருத்தும்படி உத்தரவுசெய்தும், எல்லாவற்றிற்கும் தான் சாக்ஷியாகவேயிருந்து ஆனந்தத்தை யனுபவித்துக் கொண்டிருந்தனர்.

ஆண்டவர் பரிபூரணமாகிய பதினேழாவது மாசம் கலியுகம்(௪௯௯௰)சாலிவாகன சகாப்தம் (௧௭௭௰௧) சௌமிய வருஷம் தக்ஷிணாயனம் கிரீஷ்மருது கடகமாசம் சுக்கிலபக்ஷம் (௯) பானுவாரம் சதுர்த்தி திதி பூர நக்ஷத்திரம் மிதுனலக்கனம் என்னும் இவைகள் கூடிய சுபதினத்தில் துறவுசுவாமிகள் சச்சிதானந்த பரப்பிரம்ம சமரசபாவமடைந்தனர். கருணாநிதியும் பெரியோர்களையும் அடியார்களையும் வரவழைத்து, அம்மூர்த்திகளுக்கு மண்டலாபிஷேக பரியந்தமான காரியங்களைச் சிறப்பாய் நடத்தியருளினர். அத் துறவு சுவாமிகள் பரிபூரண மடைந்த தினத்தில் அவர்கண்மீது கருணாநிதியவர்கள்.

அரியகலியுகவருடநாலாயிரத்துத்தொளாயிரத்தைம்பதின்மே
லஞ்சாலிவாகனசகாப்தமோராயிரமெடுத்தவெழுநூற்றெழுபதோன்
றூனசவுமியவருடமொடுதக்கணயனமளப்பருங்கிரீஷ்மருதுவு
மங்கடகமதிதேதியொன்பதொடுசுக்லபக்ஷாதிவாரத்தினிரவிற்
றருமமிர்தகடிகையிருபத்தினற்பூரநட்சத்திரந்திதிசதுர்த்தி [ஞ்
தனின்மிதுனலக்கினமதொடுவெரியானுடன்சார்வணிசவாகரணமு

சாற்றுமிவைசேர்சுபதினத்தினின்மணிக்கரைத்தண்கடற்றூசுடுத்த
தரைமகட்கொருதரளமாலைபுரைமதுநதித்தனிநடுமெதாணியென்ன
மருவிவளர்தென்கழகியம்பதியினுப்பனொளிர்மாணிக்கமெனவிளங்
[கும்
வரமுத்துராமகுருலிங்கத்திலெந்நாளுமன்னுமொளியாய்க்கலந்தா
மகிமைதருராகுபதிக்கருளிருடிபுங்கவவசிட்டர்போதகசத்தியும். [ன்
மலர்பணுடவியுரகனேந்துமொருபூச்சக்ரவர்த்திசனகன்ஞானமும்
வரையரியசடபரதர்சீவகாருண்யமுமன்னுசுகர்சந்நியாசமும்
வான்பரவுநாரதமகாமுனிவரேந்திரன்மனதிலுறுசிவபத்தியும்
வாரித்திரட்டியோருருவுகொடுவந்தென்னைவழிமுறைமையடிமை
[கொண்ட
மாசிலருணசலசதாசிவசுகோதயமகாகுருசிகாமணியரோ.

என்னும் ஆசிரிய விருத்தத்தை யியற்றி யருளினர். மதுரைச் சுப்பராய சுவாமிகள் அச் சுவாமிகளின் மீது * பிள்ளைத்தமிழொன்று நூறு செய்யுட்களா லியற்றினர்.

துறவுசுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

# கருணநிதிசுவாமிகள் சரித்திரம்.

துறவுசுவாமிகள் பரிபூரணமானபின்னர் அத் துறவு சுவாமிகளது ஸ்தானத்தில் வந்தவர் கருணநிதியென்னும் சிதம்பர ஞானதேசிகர் இவர் முன் பட்டத்திருந்த சுவாமிகளின் இளைய சகோதரர். அச் சுவாமிகள் துறவடைந்தமையைக் கேள்வியுற்று அவரைத் தரிசிக்கும்பொருட்டுக் கோவிலூருக்கு வந்தபோது ஆண்டவரைச் சரணடைந்து அனுக்கிரகிக்கப்பெற்று அங்கு சிலநாள் வசித்துப் பின்

* இப் பிள்ளைத்தமிழ் முன்னரே தனிப்புத்தகமாய் அச்சிடப் பட்டிருக்கின்றது.

மதுரைக்குட்டை அய்யாவுடன் திருப் பெருந்துறைக்குச் சென்று வடக்கு மடத்தில் தியான சமாதிகளைச் செய்து கொண்டிருந்தனர். இவர் இவ்வாறு ஆண்டவரை விட்டுத் தனித்திருப்பதைச் சிதம்பரத்திருந்த துறவுசுவாமிகள் அடியார்கள் வாயிலாகக்கேட்டு வருத்தமுற்று, குறுந் திரட்டுப் பெருந்திரட்டு முதலிய சாஸ்திரங்களினின்றும் ஐம்பது செய்யு ளெடுத்துத் திரட்டிச் சீடாசாரமெனப் பெயரிட்டு அதனோடு அதனபிப்பிராயம் முழுவதும் விளங் கும்படியான ஒரு நிரூபமும் எழுதி, அவற்றை ஒரு மாணுக் கரிடங் கொடுத்துச் சிதம்பரத்தின் கையிற்கொடுத்துவா வென்றனுப்பினர். அத் திருமுகத்தை அவர் திருப்பெருந் துறையிற் கருணாநிதியிடங் கொடுக்க, அதனை அவர் மிகத் திருப்தியோடுவாங்கிப் படித்துப்பார்த்துக் கண்களிலொற் றிக்கொண் டுடனே கோவிலூருக்குப் புறப்பட்டுவந்து, ஆண்டவர் உள்ளன்பிற்குப் பாத்திரராய் நடந்துவந்தனர். பின்னர் ஆண்டவர் பரிபூரணமாகுங் காலத்து ஆக்ஞாபித்த படியுந் துறவு சுவாமிகளது உத்தரவுப் பிரகாரமும் அவ் வாதீனததைப் பூரணமாகத் தாமேவகித்து, முன் தமது குருமூர்த்தி யாரம்பித்த கொற்றவாளீசுரர் ஆலயத்தையும் திருநெல்லையம்மை யாலயத்தையும் புதுக்கிச் சம்புரோ க்ஷணை செய்வித்து, உற்சவாதிகளை நடத்திவந்தனர். ஆண் டவரை மகாலிங்க மூர்த்தியாகவும் துறவுசுவாமிகளை நந்தி கேசுரராகவும் சமாதிஸ்தானத்திலமைத்து, இருவருக்கும் ஒன்ருய்க் கர்ப்பக்கிரகம் முதலியவைகளை விநோதமாக முடிப்பித்துக் கும்பாபிஷேகமும் சிறப்பாக நடத்தி, நித் திய நைமித்திய பூஜை முதலியவற்றைச் சிரத்தையோடு செய்து வரும்படி கட்டளையிட்டு, எப்போதும் குட்டை

ஞையபா முதலியோர்கள் தமதருகில் இடைவிடாதிருக்கப் பிரம ஞானோபதேசஞ் செய்துகொண்டு அங்கு எழுந்தருளியிருந்தனர்.

அங்ஙன மெழுந்தருளியிருக்குங் காலத்து ஒரு சமயம் கருணாநிதி சிதம்பரத்திற்கு நடேச தரிசனார்த்தமாகப் போயிருந்தபோது கோட்டையூர்ப் பெத்தாச்சி சுவாமிகள் பொன்னம்பல சுவாமிகளை அழைத்துவந்து ஸ்ரீ கருணாநிதி சந்நிதியிற் சேர்ப்பித்து, இப்பிள்ளை மிக மேதாவியா யிருத்தலால் பாடஞ்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, கருணாநிதியும் அவ்வாறே அவரிடத்து நற்குண நற்செய்கைகளமைந்திருந்தமையைக் கண்டு அடிமைகொண்டு, மிக அன்போடு பாலசிக்ஷை முதல் பஞ்சதசி பரியந்தம் அங்கு படிப்பித்து, பின் கோவிலூருக் கழைத்துவந்து ஏனைய சாஸ்திரங்களையும் கிரமமாகப் போதித்துவந்தனர். பொன்னம்பல சுவாமிகளும் மிகுந்த பக்தியோடு கருணாநிதியைச் சாயைபோல் விட்டு நீங்காது சந்நிதியிலே யிருந்து ஈஷணாத் திரயங்களுமொழியக் குருவின் பரிபூரண கிருபையைப் பெற்றுக் குருகுலவாசம் செய்துவந்தனர்.

இன்னும் அக்கருணாநிதி யவர்கள், தம்மைச் சரணடைந்த காரைக்குடி இராமசாமி ஞானதேசிகர் முதலிய அடியார்களுக்கு அனுக்கிரகித்து வந்தனர்.

அக்காலத் தொருநாள் ஸ்ரீ கருணாநிதியவர்கள், தமது சீடராகிய தேவிகோட்டை இலக்குமணச் செட்டியாரைப் பார்த்து, சிதம்பரம் ஸ்ரீ மூலட்டானேச்சுரர் ஆலயத்தை ஜீரணோத்தாரணம் செய்விக்கவேண்டுமென் றுத்தரவு செய்ய, அவ்வாறே இலக்குமணச் செட்டியாரும் தம்மினத்

தவர்களை வரவழைத்து, அதற்குவேண்டிய திரவியங்களைச் சேகரித்துக்கொண்டுவந்து குருமூர்த்தியின்சந்நிதியிற் றெரிவித்தனர். அப்போது கருணாநிதி களிப்புற்று அடியார் திருக்கூட்டத்தோடு சிதம்பரத்திற்கு எழுந்தருளி, பல தேசங்களிலிருந்தும் வைதிகர்களான பிராஹ்மணோத்தமர்களையும் வித்வான்களையும் மற்றுமுள்ள பெரியோர்களையும் வரவழைத்து, அபரிமிதமாகப் பிராமண போஜனம் செய்வித்து, ஸ்ரீ நடேசப்பிரானுக் கொப்பான தீக்ஷதர்களனைவரையும் பூஜித்து மரியாதைசெய்து, ஸ்ரீ மூலட்டானேசுரருக்குச் சொர்ணபந்தனம் செய்வித்து வேத விதிப்படி வெகு விமரிசையாய்க் காளயுக்தி வருஷம் ஆனி மாசம் (கசஉ) சோமவாரத்தன்று கும்பாபிஷேகம் நடப்பித்துப் பேரானந்தமுற்று அடியார்களுடன் மீண்டும் கோவிலூருக்கு எழுந்தருளினர்.

அங்கு எழுந்தருளி அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்துகொண் டிருந்ததோடு கொற்றவாளீசுவரர் ஆலயத்திற்குத் திருநெல்லையம்மை ஆலயத்திற்குங் கும்பாபிஷேகமும், அவ்வாலயங்களின் மத்தியில் நித்திய கல்யாணிக்குங் கைலாசநாதருக்கும் ஓர் புதிய ஆலயமும், சோமாஸ்கந்தருக்கு ஓர் சபையும், கல்யாணமண்டபமும், திருக்குளமும், அக்குளத்தில் மையமண்டப முதலியனவுமாகிய திருப்பணிகளை இயற்றுவித்துப் பின் செய்யவேண்டியவைகளுக்கும் படமொன் றேற்படுத்தி, கும்பாபிஷேகம் தடாகப் பிரதிஷ்டை முதலியவற்றைச் சிறப்பாக நடத்தினர். கோவிலுக்கு ஏற்பட்ட கிராமங்களையெல்லாஞ் சீர்திருத்தி அபரிமிதமான வருமானங்களை யுண்டுபண்ணி நித்திய நைமித்திய பூஜைகளையுஞ் சிறப்பாக நடத்திவரச்செய்து, மடால

யத்திற்கும் முன் கிராமத்தோடு புதிய கிராமங்களையும் வாங்கி விசேஷ வருமானத்தை யுண்டுபண்ணி அடியார்களுக்கு அன்ன முதலியவற்றை யுதவிக் குருவாக்கிய பரிபாலனஞ் செய்துவந்தனர்.

இக்கருணாநிதி கண்டனூர் சின்னையா பொன்னம்பல சுவாமிகள் முதலிய மாணாக்கர்கள் பலருக்கு பலமுறை வாசிட்டபாடம் நடத்தி, சமாப்தி காலத்தில் செய்யத்தக்க விதிப்படி மாணாக்கர்களால் அர்ப்பணஞ் செய்யப்பட்ட அளவிறந்த திரவியங்களைக் கொண்டு பிராமண போஜனம் மகேசுரபூஜை அபிஷேக ஆராதனை முதலிய வைபவங்களை விசேஷமாய் நடத்தி ஆனந்தத்தோ டிருந்தனர்.

அக்கருணாநிதி அடியார்கள்மீது அன்புகூர்ந்து தமிழ்ப் பாவால் இலக்ஷண விருத்தியென்னும் ஓர் நூலையுந் தம தாசிரியர்பேரில் ஸ்துதிபரமான அனேக செய்யுட்களையுஞ் செய்தருளினர்.

இவ்வாறு கருணாநிதி சமிவன க்ஷேத்திரத்தில் வெகு காலம் அனேக அடியார்களுக்கு அநுக்கிரகஞ் செய்து கொண்டிருந்து, ஆடிப்பூரோற்சவ இரண்டாந் திருவிழா வன்று தனது தேகம் வியோகமாகுமெனத் தெரிந்து, கல்லலையா முதலிய சாதுக்களும் பொன்னம்பல சுவாமிகள்முதலிய அடியார்களுஞ் சூழவிருக்கத் தமது சீடரான காரைக்குடி இராமசுவாமி ஞானதேசிகரை அவ்வாதீனத்திருந்த அடியார்களுக்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டு சிவாலய மடாலய முதலியவற்றைப் பரிபாலித்து வரும்படி நியமித்து, கலி (சதகூாஎயஎ) சாலிவாகன சகாப்தம் (கூளஎாகூயஎ) தாதுவருஷம் ஆடிமாசம் கிருஷ்ணபக்ஷம் சவ

சோமவாரம் ஏகாதசி ரோகணி நக்ஷத்திரம் துலாலக்கினம் என்னும் இவை பொருந்திய சுபதினத்தில் அகண்டைகரச் சுபாவமான ஆத்மானந்த சிந்துவிற் கலந்தருளினர். ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிகரும், இராமசாமி ஞானதேசிகரும், கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளும், மற்று முள்ள பெரியோர்களும் ஒருங்கு சேர்ந்து கருணாநிதியின் திரு மேனியை ஆண்டவர் சந்நிதானத்திற்கு நேராகச் சமாதி செய்வித்து அதன்பேரில் பலிபீடம்வைத்துப் பூசித்து மகேசுரபூஜை முதலியவற்றை அபரிமிதமாகச் செய்து ஆண்டவர் துறவு சுவாமிகள் ஆலயங்கட்கு எவ்வாறு நித்திய நைமித்திய பூஜைகள் நடந்து வருகின்றதோ, அவ்வாறே கருணாநிதிக்கும் பூஜை நடந்து வரும்படி செய் தார்கள்.

---

கண்டனூர்-நாகப்ப அய்யா அவர்கள் குமாரர்
முத்துராம அய்யா அவர்கள்
இயற்றியது.

திருமருவுமாயிரத்தைம்பதொன்றாமாண்டுசெறிதாதுவருடத்தினிற்
றிகழ்கடகமாதமதினான்கானதேதியுஞ்செறியமரபட்சந்தன்னிற்
றினசோமவாரமேகாதசிரோகணிதிகழ்துலாலக்கினத்தே
தேவைநகரதனில்வந்தவதாரமாகியேதென்கழநியம்பதியினிற்
குருநாதனாமுத்துராமலிங்கேசனருள்கொண்டுமேயடியவர்க்குக்
கூறானவப்பதியிருந்துபினனுக்ரகங்குணமாகவருளுகின்றோன்
கோதிலருணாசலசுவாமிகட்கிளையநற்குலமுடையசூடாமணி
கொண்டலெனவேபொழியுமண்டலத்துளவணிகர்குழுவெலாம்
[பணியவல்லோன்
மருமருவுகொற்றவாளீசனற்றிருநெல்லைமாதுதன்கருணையாலே
மதிமன்னர்நிதிமன்னர்கவிமன்னர்புவிமன்னர்வந்துபணிகின்றதீர
மங்களமதானமடவாலயசிவாலயமலர்வனஞ்சத்திரமுதல் [ன்
மலர்வானபுவனத்தனேகமுண்டாகவேவந்தகாரணவள்ளலா
மருமருவுசிவகாருணியமுதனான்குமேயழகானதிருவுருவமா
மறிவானகல்விசெல்வம்பொருமைகீர்த்தியையரவனுங்கூறமுடியா
வத்துவிதநிச்சயசிதம்பரசுவாமியென்னானந்தகருணாநிதி
யகண்டபரிபூரணசதானந்தசிற்சொரூபமாகினானறிகமாதோ.

கருணாநிதிசுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

---

சமிவனபுராணம்.

இலங்குபுகழ்வன்னிவனம்வாழ்கவொளிர்கொற்றவாளீசர்வாழ்க
கலங்குதறீர்த்தெனையாண்டநெல்லைநாயகிபெரியகருணைவாழ்க
மலங்குதலிலத்தலத்துமன்னிவளர்மாதவர்கள்வாழ்கவாழ்க
நலங்குலவுமணிமன்றுணடநவிலவெடுத்தபொற்றாளும்வாழ்க.

ஸ்ரீ ஆடவர் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

---

A. No. ...17...

சிங்கம மர்ந்தவி ளங்குயி லம்புய சிந்தா நந்தார்தஞ், செனனமு மரணமு நொடியினி னொடியளி சென்றுளும் பாவை; பொங்குது யங்களு மங்கர மிந்துமுகந்தேர் செந்து வர்வாய், பொலியவு நலியகல் வரதமு முதவிய பொன்றுய் கண் காண; துங்கமெ யன்புறி றைந்தவ னுந்துதி துஞ்சா னஞ்சேலென், றுகளில மகளென மருவுறு வரமெனத் துஞ்சா னஞ்சார்பாய்; செங்கணி தங்கவ ரங்கமமூங்கொடி செங்கோ செங்கீரை, சிறிய கரியை யருள் பொருள்வையில் வளர்பிடி செங்கோ செங்கீரை.

வேறு.

இங்காக ரங்கிருமி கங்காதி தங்குமிரை யெங்கேவிரும் பலிதனை, யின்றேக டிந்திடுதி யென்றே மொழிந்திடினு மின்பாம னந்தனியல்பைச்; சங்காரி கொன்றிடுதி சம்பாகு லேயசசி பிம்பாபி ராம முகனுற், சம்பாதை பம்பமுத வெண்பால் சுரந்துவரு தண்டார் குயங்க ளணியாய்; எங் கார ணந்துறைகள் எங்காண வம் பறைகள் எங்கே நின் பொன் சரணுறல், என்றுலு மொன்றிடுவன் மன்றுடு நம் பரம ரின்றேக மொன்று மிறைவி; சிங்கார வேலனகர் தங் காவ ருங்குமரி செங்கீரை யாடி யருளே, சிந்தாகு லந்தவிர வந்தாள் பெருங் கருணை செங்கீரை யாடியருளே.

வேறு.

புகலுல காயதம் பவுத்தஞ் சயினம் புதுவை ணவ மார்க்கம், பூரணத் துவிதம் நகுலீ சமதஞ் சைவஞ் சோக நெறி; அகலிர சேசுர மவுலோக் கியமே யக்கக் கான்மார்க் கம், அயமனு சயிமினி பாணினி சாங்கிய மரவப் பெரு யோகம்; இகலுறு மிவைகள் ஏணிய வாயினும் இனியறி வெனை யெய்த, இளநில வணியு மிறையவ னணியே யிணை யறு மெனவோதிச்; சகலமு மெனது வடிவென வருடிருத் தாயே தாலேலோ, சதுர் மறை பரவும் பொருள் வையில் விரவுந் தாயே தாலேலோ.

கோவிலூர் ஆண்டவர்
A. No. ௨79
R65(Kov)
நூலகம், கோவிலூர்



வேறு.

எங்குநி றைந்தப ரம்பொரு ளாகிய வின்பே யன்பா ரும், இன்சொன் மடந்தாய் கஞ்சமெ ழுந்தா யெஞ்சா விஞ் சையளே; பங்கஜ னங்கஜ னெங்குஜ னும்பணி பஞ்சார் செஞ்சரணே, பந்தம கன்றெழி சிந்தனை வந்தெழு பண்பீ தண்பாவாய்; சங்கைய றும்படி செங்கையு றுங்கனி தன்றே சொன்றேதான், சம்பிர மஞ்சக நம்பியு ணர் தரத் தண்டா மண்டருடாய்; கொங்கைகள் பொங்கவ ருங்கரி யுண்கருள் கொட்டுக சப்பாணி, கொண்டனி ரம்பிய பொன்பதி யம்பிகை கொட்டுக சப்பாணி.

வேறு

பஞ்சகோசங் கடந்துபரம் பிரமமாயி னுங்கவனும், பகரு மஜனித் தியன்சாசு வதன் புராணன் படி. றில்லான்; அஞ்சிலணுவுக் கணுவாகி யரிய மகத்தின் மகத்தாவன், அகத்திற்றனையே தெளிவாக வலைவிலாம லமைகாண்பான்; நெஞ்சைப்புலனை நிறுவாதான் நிதனங் கதுவு நிறுவு தற் காய், நிகழும் பீஜ மந்திரவக் கரமாந்திரய நிகழ்த்து கெனுச்; செஞ்சொன் மிழற்றுந் திருப்பாவாய் சிரித்து முத்தந் தருகவே, செல்வர்க்கினிமைதரும் பொருள்வைச் சிவையே முத்தந்தருகவே.

வேறு.

துன்மகிடாசுர மர்த்தனி ரம்யக பர்த்தனி சைலசுதை, தோதக மாதக பாதக காதக தூளிவி ளைந்திலை யேற்; கன்மக மார்க்கங் கதியதன் தீர்க்கமுங் கண்டதும் விண் டதுபார், காதிட வாதிட வோதிடு மாதிடர் காலியலை போ லும்; வன்மகு காரிய் காரணம் வாஞ்சியா வம்பிது துன்ப மிதே,வாடலு மூடலு மாடலும் பாடலும் வாளா வீழாவே; அன்மொழி யன்றினி யம்பிகை யாடிட வம்புலி வந்திடுநீ, யாடக் மோடக தோடக மார்பதி யம்புலி வந்திடுநீ.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

PRINTED AT SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.